பல்சுவை

# தமிழ்நெஞ்சம்

www.tamilnenjam.com

நவம்பர் 2017



நன்மக்கள் உள்ளமெலாம் நல்லொளியால் நிரம்பட்டும்,
நன்னெறிபால் எல்லோரும் ஒருங்கிணைந்து திரும்பட்டும்!

பல்சுவை
# தமிழ்நெஞ்சம்

தோற்றம் 1972

நவம்பர் 2017

ஆசிரியர் / வெளியிடுபவர் :
அமின் மொஹமெட்

இணையாசிரியர் :
சஃபி மொஹமெட்

ஆசிரியர் குழு :
முனைவர். பெண்ணியம் செல்வக்குமாரி
ஹிப்ஸுர் ரஹ்மான்
நெல்லை உலகம்மாள்
வசந்தி ஆதித்தன்
கவிஞர் அ. முத்துசாமி
கவிஞர் ஈழபாரதி
கவிஞர் பாலமுனை பாறூக்

ஆலோசகர்கள் :
“பைந்தமிழரசு” பாவலர் மா. வரதராசன்
கவிதாயினி சக்தி ஜோதி
கவிதாயினி அமுதா பொற்கொடி

**எழுத்தாளர்கள், நன்கொடையாளர்கள், புரவலர்கள் மற்றும் விமர்சனம், அறிமுகத்திற்கு நூல்கள் அனுப்ப அஞ்சல் தொடர்புகளுக்கு ...**

TAMILNENJAM
59, rue des Entrechats, 95800 Cergy - France

web : tamilnenjam.com
email : editor@tamilnenjam.com

புதிய ஆக்கங்களும், விமர்சனங்களும் எதிர்பார்க்கப்படுகின்றன. நூல் விமர்சனத்துக்கு, நூலின் இரண்டு பிரதிகளை அனுப்ப வேண்டும்.

படைப்புகளுக்கு படைப்பாளிகளே பொறுப்பு. செவ்வைப் படுத்த ஆசிரியர் குழுவுக்கு உரிமையுண்டு.

**புதிய வெளியீடு...**




**தேவைக்கு தொடர்புக்கொள்ளவும்.**

## அன்று இந்தி
## இன்று ஆங்கிலம்
## நாளை சமற்கிருதம்
## என்று... தமிழ்?

இந்தியினை எதிர்க்கின்றோம்
அறுபதாண்டாய் என்கின்றீர்
ஏற்றமென்ன தமிழுக்குச்
செய்து விட்டீர்?

வந்த இந்தி ஆங்கிலத்தால்
சொந்தத்தமிழ் தானழியும்
வகைநீக்க வழியென்ன
கண்டு விட்டீர்?

எந்தமொழி வயிர்நிரப்பும்
என்றெண்ணிப் படிக்கின்றீர்
எம்தமிழை அதனாலே
அழித்து விட்டீர்?

செந்தமிழழைக் காப்பதற்கு
சமற்கிருதம் எதிர்ப்பதல்ல
செந்தமிழில் கல்வியினைக்
கற்க வேண்டும்

எதிர்க்கின்றோம் இந்தியினை
என்றுசொன்னால் இன்னால் மட்டும்
எம்தமிழைக் காப்பதற்கு
என்ன செய்தீர்?

இந்தியினைப் படிப்பதினால்
வேலைவாய்ப்பு நாமிருக்கும்
இடம்தேடி வருமென்று
சொல்லு கின்றீர்

இந்தியினைத் தாய்மொழியாய்
கொண்டவர்கள் வடநாட்டில்
இந்தியிலே கேட்கின்றார்
நாளும் "பிச்சை"

செந்தமிழர் இந்தியாவில்
செந்தமிழைக் காத்திடவே
முடியாது என்றுணர்ந்து
எழுவ தென்று?

சிந்திப்பீர், மொழியழிந்தால்
இனமழியும் நாடழியும்
சினந்தெழுந்து வேங்கையாக
வருவ தென்று?

தமிழ்நாட்டில் அயலவர்கள்
இல்லாமல் தமிழ்நாடு
தமிழர் நாடு என்றாகும்
நாளமைப்போம்

இமைக்கின்ற நேரத்தில்
இனம்அழிக்கக் காத்திருக்கும்
இரண்டகன்கள்,இனப்பகைவர்
உள்ளயினம்

எதிர்ப்பதொன்றே கொள்கையாக
கொள்ளாமல் இன்பத்தமிழ்
எம்நாட்டில் வாழ்வதற்கும்
வழியும் செய்வீர்

கதிரொளியால் மறைந்தோடும்
காரிருளைப் போலயிங்கே
கனிதமிழில் கற்றாலே
கசப்பு மாறும்

**புதுவைத் தமிழ்நெஞ்சன்**



# பழகிப்பார் பிடிக்கவில்லையா இருக்கிறது இன்னும் ஒன்று!

## கௌசி

“காலடிக்கும் கன்னாக்காரி நானிருக்கன் don‘t worry . உனக்கெதுக்கு அச்சம் அச்சம். ஆசைக்கள allow பண்ணு. அச்சங்கள deleat பண்ணு. போய் வரலாம் உச்சம் உச்சம்.

“இன்னும் கொஞ்சம் சத்தமாப் போடு, இன்னும் கொஞ்சம் சத்தமாப் போடு. என்ன இது கொஞ்சமும் உசார் இல்லாம இருக்கு”

சகுந்தலா வாகனத்துள் இருந்தவளாய். முன் இருக்கையில் அமர்ந்து இருக்கும் மகளிடம் பாட்டை சத்தமாய்ப் போடும்படி கரைச்சல் கொடுத்துக் கொண்டிருந்தாள்.

“பொறுங்க அம்மா. உங்கள் உசாருக்கெல்லாம் பாட்டுப் போட முடியாது. நவியிட சத்தமும் கேட்குதில்ல. எங்க கொண்டு எங்கள கொல்லப் போறீங்களோ தெரியாது” மகள் வசந்தி தனது காதலன் சபேஷின் அருகில் இருந்தபடி தாயை அதட்டினாள்.

“பேசாம இரும் சகு. சத்தம் கூட்டினால் நவிகேசன் சத்தம் சரியாக் கேட்காது” ருத்ராவின் வார்த்தைகளைக் கேட்டு

“இல்ல ருத்ரா. பாட்டு உசாரா இருந்தாத்தான் பிரயாண களைப்புத் தெரியாது”

“ஏன் நான் பக்கத்தில் இல்லையா? ருத்ரா சகுந்தலாவைக் கட்டி அணைத்தான்.

முன் இருக்கையில் மகள் வசந்தியும் அவள் காதலன் சபேஷும் இருக்க, பின் இருக்கையில் சகுந்தலாவும் அவள் காதலன் ருத்ராவும் இருந்தபடி வாகனத்தில் பயணம் செய்து கொண்டிருந்தார்கள்.

“வீட்டில் அப்பா என்ன செய்றாரோ தெரியாது. ஒருக்கா டெலிபோன் எடுத்துப் பாருங்கோ அம்மா”

“சும்மா இருக்க மாட்டா... தொடங்கிட்டியா... கொஞ்சம் நிம்மதியா இருக்கலாம் என்றுதான் வந்தனான். திரும்பவும் அந்த மனிசன நினைவுபடுத்திறாய். அவர் ஒன்றும் செத்துக்



கித்துப் போக மாட்டார். அந்த ஹார்ட் பேசன்ட்டோட என்ன கிடந்தது சாகச் சொல்லாத"

"ஏன் அம்மா உங்களுக்குக் ஹார்ட் இல்லையா? உங்களுக்கு வருத்தம் வராதா?

"இப்ப என்ன செய்யச் சொல்றாய். எனக்கும் வர வேணும் என்று விரும்புறியா? அந்த வருத்தக்காரனோட வீட்டிலேயே கிடக்க வேண்டும் என்றியா? ஆத்திரத்தில் கத்தினாள் சகுந்தலா.

"cool.... cool சகுந்தலா" என்றபடி அவளைச் சாந்தப் படுத்தினான் ருத்ரா.

பேரின்பம் அன்பாகவும் சிறப்பாகவும் மனைவி மகளுடன் வாழ்ந்தவர் தான். காலம் மனிதர் வாழ்வில் தானாகவே சேற்றை அள்ளிப் பூச நோயைக் கொண்டு வந்து சேர்த்துவிடும். நோய் வந்து விட்டால் வலி சினத்தைத் தருவதுதானே இயற்கை. பொறுத்து வாழக் கட்டிய தாலி அச்சப்படுத்திய காலம் கடந்துவிட்டது. வாழும் போது கட்டிய கணவனிடம் பெற்ற சுகம் அனைத்தும், அவன் துன்பப்படும் காலத்தில் மறந்து விடுவதுதான் இக்காலத்தின் நிகழ்வு என்பதாயிற்று. அவனைத் தூக்கி நிமிர்த்த மனம் ஒப்பவில்லையானாலும் வேறு ஒருவனை அணைக்க எப்படி மனம் வருகின்றதோ புரியவில்லை. ஆனால், சகுந்தலாக்கு அந்த மனம் இருக்கிறது.

வீட்டை விட்டு வெளியே போவதுதான் அவளுக்கு பாரிய இன்பம் அதுவும் ருத்ராவுடன் போவது என்றால் கொள்ளைப் பிரியம். சந்தி சிரிப்பது பற்றிய அச்சம் அவளுக்கு இல்லை. இருந்திருந்தால், தனது மகளை இப்படி வளர்த்திருப்பாளா?

எப்படி என்று கேட்கின்றீர்களா?

வசந்தி, சகுந்தலா பேரின்பம் பெற்றெடுத்த ஒரே பெண்பிள்ளை. கல்வி என்பது கொஞ்சம் முயற்சி எடுத்தால், பெற்றுக் கொள்வதற்கு ஐரோப்பிய நாடு வேண்டிய உதவிகளை வழங்கும். அதனால் வசந்தி நன்றாகப்

# இரவின் புன்னகை

**அந்தி மகள் அழகு மறைத்து**
**முந்தி விரித்து முந்நிருள் முகர்ந்தாள்**
**எந்திரம் போல மந்திர மதியும்**
**பிந்தியில் வந்தால் பின்னும் ஒளியில்**

**சற்றே திறந்த சாளரம் வெளியில்**
**முற்றே தெரிந்த முல்லை கொடிகள்**
**பற்றே படர்ந்து பரவும் மணங்கள்**
**கொற்றவன் இல்லாய் கொண்டன நெடிகள்**

**கோடிக் கிணற்று உடைந்த மடிகள்**
**பாடிய பண்கள் பலதும் மறந்து**
**மூடிய சிறகில் முகத்தை மூழ்கி**
**கூடிய குயில்கள் குவித்தன சுகங்கள்**

**சாலையின் ஓரம் நீளவும் பார்த்தேன்**
**ஓலையும் அற்ற ஏழையின் குடில்கள்**
**நாளை என்றே நினைவும் இல்லா**
**பாலையில் பூத்த சோலையின் கனிகள்**

**அரவம் நஞ்சாம் கடும்பசி கண்டும்**
**பரவும் நோய்கள் பலதும் கொண்டும்**
**கரும்பாய் மக்கள் கண்வளர்கண்டு**
**உறங்கச் சென்றான் ஊமையில் நானே**
**இரவின் புன்னகை இதுதான் என்றே.**

**- கவிஞர் பாமல்லன்**

பாவலன் கோலெடுத்தான்
பாவையோ யாழெடுத்தாள்
கோவலன் சினமெடுத்தான்
கொல்லனே களவெடுத்தான்
காவலன் வாளெடுத்தான்
கர்வமாய்ச் சிரமெடுத்தான்
கண்ணகி சிலம்பெடுத்தாள்
கண்களில் நெருப்பெடுத்தாள்
மடிந்தது மன்னராட்சி
மதுரையே சாம்பலாச்சு!

ஜவாத் மரைக்கார்



படித்தாள். நல்ல தொழிலும் பெற்றாள். சமுதாயக் கட்டுப்பாடுகள், ஒழுக்க நெறிகள் அவளுக்கு புரியாத புதிர். வாழ்க்கை என்பது ஒருமுறைதான் அதை வாழ்ந்து முடிக்க எப்படியும் வாழலாம் என்னும் இலட்சியத்தை உடையவள். ஆனால், தந்தையில் பாசம் அதிகம் இருந்தாலும் தாயின் போக்கில் பிடிப்பு பற்றிக்கொண்டதற்கு காரணம் கேட்க முடியாது. பிள்ளையைத் தாய் சரியான முறையில் வளர்த்தெடுப்பாள் என்பதில் அதிக நம்பிக்கை கொண்டவர்தான் பேரின்பம். அதனால், அவர்கள் இருவரும் பேரின்பத்திற்குச் செய்தது நம்பிக்கைத் துரோகம். அவருக்கு மட்டுமா!

“வசந்தி! உனக்கு கணவன் வேணுமென்றால், நான் சொல்வதைக் கேள். உணர ஆட்டத்திற்கு எல்லாம் ஆடவேண்டும் என்றால், இலங்கையில் இருந்து ஒருவனை இங்கே எடு. பழகிப் பார். அந்த நேரமே வேறு ஒருவனைத் தேடிப்பிடி. அவனோட பழகிப்பார். எது ஒத்து வருதோ அவனை கல்யாணம் செய். I mean இலங்கையில் இருந்து கூப்பிட்டவனை விட்டுப் போட்டு மற்றவனைக் கல்யாணம் செய். இது ஒன்றும் தவறில்ல. பிடித்தவனைத் தானே கல்யாணம் செய்ய வேணும். கல்யாணம் ஆயிரம் காலத்துப் பயிர் என்று சொல்லி யிருக்கின்றார்கள்” இவ்வாறே சகுந்தலா மகளுக்கு புத்தி சொல்லி வளர்த்தாள்.

தாய் சொல்லே மந்திரம் என்று நினைத்த வசந்தியும் ராம் ஐ இலங்கையில் இருந்து ஜேர்மனிக்கு இறக்குமதி செய்தாள். வந்தவனோ காதலி மனம் நிறையக் காதல் சுமந்தவள் என தப்புக் கணக்குப் போட்டான். அன்பாகத்தான் பழகினாள். அளவுக்கதிகமாகக் காதலைக் கொட்டினாள். மதி மயங்கி கண்கெட்ட காதலுக்கு ராமும் அடிமையாக்கினான். தன் உடலெங்கும் அவள் பெயரைப் பச்சை குத்தினான். அவள் இன்றி ஒரு மணிப் பொழுதைக் கூட அவனால் தாண்ட முடியவில்லை. ஆனால், வசந்தியோ...

“இங்க பாருங்க ராம். உங்களை நான் இங்கே கூப்பிட்டு எடுத்தது உங்களுக்கு நல்லதாப் போயிட்டுது. சும்மா உங்களால் இலங்கையில் இருந்து ஜேர்மனிக்கு வரமுடியாது. அந்த உதவியை நான் தான் உங்களுக்குத் தந்திருக்கிறேன். நீங்கள் இங்கே வேலை செய்யக் கூடிய அனைத்து வசதிகளும் இருக்கிறது. எனக்கு ராம்... உங்களை விட வேறு ஒரு பெடியனில் ஆசை ஏற்பட்டு விட்டது. அவன் இங்கே பிறந்துள்ளான். எனக்கு அவன் கூட வசதியாகத் தெரிகின்றான். அவனோடப் பழகிப் பார்க்கிறான். பிடிக்கவில்லை என்றால் உங்களைத் திருமணம் செய்கிறேன். ok தானே.

“வாழ்க்கையை எப்படி இலகுவாக எடுக்கிறாய். நான் இங்கை வருவதற்காகவா உன்னோடு பழகினேன். நான் உன்னை என் உயிராக அல்லவா நினைத்தேன்”

“Stupid... சேர்ந்து வாழ மனம் ஒத்துப் போக வேணும். எனக்கு உன்ன விட best தேவை”

இப்படிக் கூறித் தான் வசந்தி, ராமை பிரிந்தாள்

வசந்தியை மறக்க முடியாத வேதனை

அவன் வாழ்க்கையை வெறுக்கச் செய்தது. சகுந்தலாவிடம் சொல்லி, வசந்தி மனதை மாற்றலாம் என்று கருதிய ராம், அவள் தாய் சகுந்தலாவிடம் முறையிட்டான்.

"ராம். இந்தக் காலத்துப் பிள்ளைகள் இப்படித்தான் தம்பி. வெள்ளைக்காரப் பிள்ளைகளப் பார் குறைந்தது ஒரு 30 பெடியங்களோட பழகித்தான், பிறகு ஒருவனைக் கல்யாணம் செய்வார்கள். நீர் வேண்டுமென்றால் வேற பெட்டைய பிடியும். ஆனால், கல்யாணம் கட்டிப் போடாதையும். வசந்தி இப்ப புதுப்பெடியனப் பிடித்திருக்கிறாள். உமக்குத் தெரியும்தானே. அவன் அவளுக்கு ஒத்து வரவில்லை என்றால், உம்மோடதான் வாழ்வாள் தம்பி"

"நல்ல தீர்ப்பு சொல்லியிருக்கிறீங்கள். கல்யாணம் என்பதும், காதல் என்பதும் உங்களுக்கு வியாபாரமாய் போய்விட்டது. நல்ல அம்மாவும், நல்ல மகளும்"

என்றபடி ஏக்கம் கொண்ட மனதுடன் நம்பிக்கை துரோகத்தையும் சுயநலத்தையும் எண்ணி கலங்கினான் ராம்.

வீட்டில் தாலி கட்டிய கணவன் தனித்திருக்கத் தன் காதலன் ருத்ராவுடன் தாய் சகுந்தலாவும், இலங்கையில் இருந்து திருமணம் செய்வதற்காக அழைத்தெடுத்த ராமைத் தவிக்க விட்டுத் தன் காதலனுடன் வசந்தியும் உல்லாசப் பிரயாணம் மேற்கொண்டு டென்மார்க் நோக்கிப் பயணம் செய்தார்கள்.



# நிறங்கள்

*வயல்களில் பச்சை இல்லை!*
*நதிகளில் நீலம் இல்லை!*

*நகர்ந்திடும் மேகங்களில்*
*ஊதா இல்லை!*

*இனப் படுகொலைகளில் வழிகிறது*
*சிவப்பு ரத்தங்கள்!*

*பதுக்கிடும் நோட்டுக்களுக்கு*
*கறுப்புப்பணமென்று பெயர்!*

*பேசிடும் வார்த்தைகளில் தூய*
*வெண்மை இல்லை!*

*பெண்களின் மஞ்சள் முகத்தில்*
*ஒரு சோகத்தின் புன்னகை!*

*வறண்டு வெடித்த நிலத்தில்*
*அரக்கு நிறத்தின் சாயல்!*

*தீக்குளித்த உடல்களில்*
*சாம்பல் பஸ்பங்கள்!*

*ரசிக்க முடிவதில்லை நிறங்களை,*
*ஒவ்வொன்றிலும் ஒட்டிக் கொண்டுள்ளது*
*உயிரின் சிராய்ப்புகள்!*

*எப்போதாவது தோன்றும் வானவில்லும்,*
*தோட்டம் சுற்றும் பட்டாம்பூச்சியும்*
*ஏக்கத்தைப் போக்குகின்றன!*

*சாயம் போகாத நிறங்கள்*
*அங்கேயாவது நிலைத்திருக்கட்டும்!*

**ஃபாத்திமா**
ஷார்ஜா.



# வாசிப்பு

இஸ்மாயில் ஏ முகம்மட்
சம்மாந்துறை, இலங்கை



வாசிப்பே அறிவுக்கு வலுவூட்டும் - எங்கள்
வாழ் நாளைச் சிறப்பாக்கிப் பலமூட்டும்
தேசத்தின் பேரோங்க வழி காட்டும் - நிதம்
தெவிட்டாத தெள்ளமுதாய்ச் சுவை மீட்டும்
நேசிப்பே உள்ளத்தை நேராக்கும் - நூல்
நெடுங்காலப் பேதமையைச் சீராக்கும்
போசிக்கும் வாண்மையிலே ஆளாக்கும் - எம்
பொடுபோக்குக் கயமைகளைத் தூளாக்கும்!

கருவறைக்குட் தங்குகின்ற காலந்தொட்டே - தாய்க்
கட்டாயம் நன்னூற்கள் கற்றல் வேண்டும்
பெருமளவி லறிவுடைமைப் பெருக்கெடுக்க - எம்
பெற்றோர்கள் வாசிப்பில் நிற்றல் வேண்டும்
குரு குலத்துக் கல்வி முறைத் தோற்றந் தன்னில் - முதற்
குரு நாதர் கரு தாங்குந் தாயே யன்றோ!
துருப் பிடிக்கா வண்ணம் நம் உள்ளம் நிற்க - நூற்
தூரிகையால் புது வண்ணந் தீட்டல் வேண்டும்!

சிந்திக்கும் ஆற்றலுக்கு ஊட்டச் சத்தாய் - மதிச்
செயன் முறையைச் சுழல வைக்கும் விராட்டினமாய்ச்
சந்திக்கும் முதற் தோழன் வாசிப்புத் தான் - பெருஞ்
சாதனைக்குக் கை கொடுப்பான் நிச்சயந்தான்
பந்திக்குப் பந்தி பெருங் கவனம் வைத்து - வரும்
பத்திரிகைச் சேதிகளை வாசித்தல் வேண்டும்
முந்தித் தான் செயற்படுதல் வேண்டும் நாளும் - இதை
முயற்சித்தால் அறிவாற்றல் பெருகி வாழும்!

அறிவுக்குத் திறவு கோல் வாசிப்பென்பர் - பகுத்
அறிவுக் கண் திறக்கின்ற ஆயுதம் என்பர்
குறிக்கோளை வென்று தரும் சக்தியாகும் - நிறைக்
குடமாக்க வழி காட்டும் யுக்தி யாகும்
நெறி தவறா வாழ்க்கைக்கு ஏற்றதாகும் - நெஞ்சில்
நிலைத்திருக்கும் கூர் மதிக்கு ஊற்றேயாகும்
பொறி புலனாம் ஐந்தடக்கல் என்றுங் காக்கும் - யாரும்
போற்றும் படி வாழ்வதற்காய்ப் புகழைச் சேர்க்கும்!

# அறிவுக்கு வலுவூட்டும்

வீட்டிற்குள் ஓரறையை ஒதுக்கி வைத்து - மதி
வீச்சொளிரும் நூலகத்தை அமைத்தல் வேண்டும்
கூட்டுணர்வின் அடிப்படையில் பெற்றோர் கூடி - தம்
குழந்தைகளோ குதூகலிக்க வாசித்தல் வேண்டும்
நாட்டுணர்வை இளமையிலே வளர்க்கச் செய்ய - தொடர்
நல்லறிவு நூற்கள் பல சேர்த்தல் வேண்டும் - முது
பாட்டியுடன் பேசி நின்ற பழங்கதைகள் போதும் - தினப்
பத்திரிகை வாசித்தால் பொது அறிவு தோன்றும்!

நீரின் மேல் எழுத்தாகும் இருத்தல் நீக்கி - உடன்
நிலைத்திருக்கும் வரை பொழிந்த எழுத்தாய் மாற்றும்
நாரின்மை உள்ளத்தை நற்கேண்மையாக்கி - பொது
நலத்தின் கண் வாழ்வதற்கு நல்லவழி காட்டும்
பாரின் மேல் பேதமையை வேரோடு போக்கி - நற்
பண்புடைமை வளர்வதற்கு பகுத்தறி வூட்டும்
கூரின் கண் அகப்பட்ட கனியைப் போலே - நிறைக்
கூர் மதியைத் தந்து கறை உடனே ஓட்டும்!

உயிர் வாழப் பிராணத்தைச் சுவாசித்தல் போலே - மதி
உயிர்ப்பிக்க நன்னூற்கள் வாசித்தல் வேண்டும்
வயிறார உணவுண்டு பசி நீங்கல் போலே - சொல்
வளமாகிப் பெருக்கேற வாசித்தல் வேண்டும்
பயிரொன்று விளைகின்ற பக்குவத்தை போலே - முளைப்
பருவத்தில் வாசித்துப் பயன் சேர்க்க வேண்டும்
வெயிலுக்குள் அகப்பட்ட புழுக்கூட்டம் போலே - நாம்
வேகாமல் இருப்பதற்காய் வாசித்தல் வேண்டும்!

காசிக்கு ஏதேதோ நாம் வாங்கிக் கொண்டோம் - அது
கல்விக்கு உதவாமல் பயன் என்ன கண்டோம் ?
யோசிக்க மறந்தோமே வாழ் நாளை எண்ணி - ஒரு
யோகத்தில் வளராது அறிவாற்றல் மின்னி
யாசிக்கப் போகாமல் தடை போடும் ஒன்று - இதை
யார் யார்தான் அறிவாரோ வாசிப்பில் நின்று
வாசிப்பில் உயர்ந்தோரின் வழி காட்டல் உண்டு - எம்
வாழ் நாளைக் கழிப்போமா அவர் பாதை சென்று?

காந்திக்கும் நேருக்கும் தோழர்கள் யாரு - நிதம்
கற்கின்ற நூல் அன்றி யார் என்று கூறு?
சாந்திக்கு அலைகின்ற மனிதர்கள் பாரு - நூலைச்
சந்தித்தால் கவலைத் தீ அழிக்கின்ற நீரு
மாந்தித் தான் ருசிப்போமே வாசிப்புச் சாறு - கார்
மருள் கொண்ட மனமங்கு உடனாகும் நீறு
நீந்தித்தான் பார்ப்போமே எதிர் நீச்சலோடு - உடன்
நினைக்கின்ற இடஞ் செல்ல வாசிப்பைத் தேடு!





# உளவியலிலும் உடலியலிலும் அறிவியல் பார்வை

பேராசிரியர் கே. ராஜு

**வ**ட இந்தியாவின் சில பகுதிகளில் பெண்கள் தலையில் ஹெல்மெட் அணிந்து கொண்டே தூங்குவதாக அண்மையில் செய்திகள் வந்தன. எதற்குத் தெரியுமா? பேய்கள் வந்து அவர்கள் முடியை வெட்டிக் கொண்டு போகாமல் இருக்கத்தான்! பேய்களை விரட்டியடிக்க சாமியார்கள் வரவழைக்கப்பட்டு சிறப்பு பூஜைகளும் சடங்குகளும் செய்யப்பட்டனவாம். விஞ்ஞானம் இவ்வளவு வளர்ந்துள்ள இக்காலத்திலும் பெரும்பகுதி இந்தியர்கள் மூடநம்பிக்கைகளில் கட்டுண்டு கிடப்பதும் அறிவியல் அடிப்படையே இல்லாத வதந்திகளை நம்புவதும் எவ்வளவு துயரமானது! பெரும்பகுதி மக்கள் இப்படி வதந்திகளை நம்பி ஏமாறுவது இது முதல் முறையல்ல. விநாயகர் சிலைகள் பால் குடிக்கின்றன... ஏசு கிறிஸ்து சிலையிலிருந்து புனிதநீர் சொட்டுகிறது... ஹாஜி அலி தர்காவைச் சுற்றியுள்ள நீர் அதியற்புதமான முறையில் இனிக்கத் தொடங்கியிருக்கிறது... என பல வதந்திகள் கடந்த காலத்தில் மக்களை அலைக்கழித்துள்ளன. 2013-ம் ஆண்டில் மழை பெய்யும்போது தீபாவளியைக் கொண்டாடவில்லையெனில் ஒவ்வொரு குடும்பமும் தனது மூத்த மகனை இழக்க வேண்டியிருக்கும் அல்லது பேரிழப்பைச் சந்திக்க வேண்டியிருக்கும் என்ற மூடநம்பிக்கைக்கு ஆட்பட்டு மத்தியப்பிரதேசமாநிலத்தின் 40 கிராமங்களில் தீபாவளியை இரண்டரை மாதங்களுக்கு

முன்பாகவே கொண்டாடிவிட்டனர்!

இப்படி ஏமாறக்கூடிய மக்கள் வரிசையில் மேலும் மேலும் கேள்வி எதையும் கேட்காமல் மக்கள் இணையும்போது அது எளிதில் ஒரு கூட்ட வெறியாக (mass hysteria) மாறிவிடுகிறது. ஒவ்வொருவரும் புத்திசாலித்தனமான நடவடிக்கையில் ஈடுபடுவதாக நினைத்துக் கொண்டு பகுத்தறிவுக்குப் பொருந்தாத அந்த நடவடிக்கையில் ஈடுபடத் தொடங்கி விடுகின்றனர். இது ஒரு கூட்டு மயக்கம். அறிவியல் விழாக்கள், கண்காட்சிகள், பிற அறிவியல் நடவடிக்கைகளை அறிவியலாளர்கள் திட்டமிட்டு நடத்த வேண்டியுள்ளது. மிகப் பெரிய அறிவியல் இயக்கத்தை மக்களிடையே கொண்டு செல்ல வேண்டிய தேவை எழுந்திருக்கிறது.

இது உளவியல் சார்ந்த மயக்கம் எனில், உடலியல் சார்ந்த மயக்கங்களும் நம்மிடையே உண்டு. வாழ்வியல் நோய்களைப் பற்றியும் அவற்றால் ஏற்படும் கேடுகளைப் பற்றியும் நாம் நன்கு அறிவோம். வளரிளம் பருவத்தினரும் அறிவார்கள். உடல்நலத்திற்குக் கேடு விளைவிக்கும் நொறுக்குத் தீனிகளையும் சுகாதாரமற்ற உணவுப் பொருட்களையும் (Junkfoods) அவை இதயக்கோளாறுகளை ஏற்படுத்தக் கூடியவை என்பதைத் தெரிந்து கொண்டே இளைஞர்கள் உட்கொள்கின்றனர். சாதாரண மக்களைவிட கூடுதலான விழிப்புணர்வு பெற்றிருந்தும் கூட பதின்பருவ வயதினரிடையே அவர்கள் அறிந்தவற்றுக்கும் அவர்கள் கடைப்பிடிக்கும் நடைமுறைகளுக்கும் இடையே பெரிய இடைவெளி இருக்கிறது என கொல்கத்தாவில் நடத்தப்பட்ட ஓர் ஆய்வு தெரிவிக்கிறது. ஒரு நாளைக்கு மூன்று தடவைகளுக்கு மேல் சாப்பிடுவது, வயிறு முட்ட தாராளமாகச் சாப்பிடுவது, அடிக்கடி நொறுக்குத் தீனியை உட்கொள்வது, தெருவோரக் கடைகளில் அசுத்தமான பொருட்களை உண்பது என அவர்களது உணவுப் பழக்கம் அவர்கள் படித்து அறிந்துகொண்டதற்கு நேர்மாறானதாக இருக்கிறது.

கொல்கத்தாவில் உள்ள மருத்துவ மனைகள் வேறு சில அமைப்புகளுடனும் கலிபோர்னியா பல்கலைக்கழகத்துடனும் இணைந்து நடத்திய மேற்கண்ட ஆய்வின் முடிவுகளை - பிஎம்சி பொது சுகாதாரம் இதழில் வெளியிட்டது. கொல்கத்தா மாநகரத்தில் ஒன்பதாவது வகுப்பில் படிக்கும் 1600 மாணவர்களிடம் இந்த ஆய்வு நடத்தப்பட்டது. வாழ்வியல் நோய்கள் பற்றிய புரிதல், மேற்கொள்ளும் உடற்பயிற்சிகள், உணவுப் பழக்கம் போன்ற தகவல்கள் மாணவர்களிடமிருந்து திரட்டப்பட்டன. அவர்களில் 20 சதமானோருக்கு இதயக்கோளாறுகள் உள்ள குடும்ப வரலாறு இருந்தது. பெரும்பாலானோர் இதயக்கோளாறுகள் பற்றிய விவரங்களை அறிந்திருக்கவில்லை. ஆபத்து பற்றி அறிந்தவர்களும் அறியாதவர்களும் உணவுப் பழக்க வழக்கங்களில் மோசமாகவே நடந்து கொண்டனர். இதயக் கோளாறுகள் அண்டாமலிருக்கத் தேவையான உணவு, உடற்பயிற்சி பற்றிய திட்டங்கள் பள்ளிகளில் அவசியம் தேவை என ஆய்வு தெரிவிக்கிறது. ஆரோக்கியமான உணவுப் பழக்கங்களையும் வாழ்வியல் நடைமுறையையும் பதின்பருவத்திலேயே பதிய வைத்துவிடுவது பிற்காலத்தில் உடற்பருமன், மனஅழுத்தம், நீரிழிவு, இதயக் கோளாறுகள், வளர்சிதை மாற்ற நோய்க்குறி (metabolic syndrome), முதுகெலும்பு மற்றும் எலும்புகளில் உருவாகும் நோய்கள் வராமல் தடுக்க உதவி செய்யும். பள்ளிப் பாடத்திட்டத்திலேயே வாழ்வியல் நோய்கள் பற்றிய தகவல்களைச் சேர்த்துவிட வேண்டும் என்கிறார் தில்லி மருத்துவ சங்கத்தின் தலைவர் டாக்டர் விஜய் மல்ஹோத்ரா.

(உதவிய கட்டுரைகள் : செப்டம்பர் 2017 சயன்ஸ் ரிப்போர்ட்டர் தலையங்கம் மற்றும் ஸ்பெக்ட்ரம் பகுதி)

# குதிரைக்காரனும் குபேரனாகி விடலாம்

பதிமூன்று வயதில் படிப்பு போச்சு! வீட்டில் ஏழ்மை! தொடர்ந்து பல நாட்களாக பசி! வேலை தேடித் தேடி அலுத்துப் போச்சு! ஒருநாள், பசியால் மயக்கமடைந்து ஒரு நாடகக் கொட்டகை வாசலில் சொருகும் கண்களுடன் அமர்ந்திருந்தான் அந்த சிறுவன்.

ஒரு பணக்காரர் குதிரையில் நாடகம் பார்க்க வந்தார்.

பையனிடம், ''டேய்! இங்கே கட்டிவிட்டு செல்லும் குதிரைகள் காணாமல் போகின்றன. நீ இதைப் பார்த்துக் கொள். வரும் போது காசு தருகிறேன்,'' என்றார்.

"ஆஹா... இப்படி ஒரு வேலையா?'' பையன் ஆர்வமாகத் தலையாட்டினான்.



தெம்புடன் எழுந்தான். நாடகம் முடிந்து பணக்காரர் வெளியே வந்தார். வெளியே நிற்பது தன் குதிரை தானா என்ற சந்தேகம் வந்து விட்டது.

குதிரையைச் சுத்தப்படுத்தி, சேணத்தை பளபளப்பாக துடைத்து வைத்திருந்தான் பையன்.

சற்று அதிகமாக பணத்தை அவனிடம் நீட்டினார் பணக்காரர். சில்லரை கிடைக்குமென நினைத்தவனின் கையில் பணம்ஞ் மகிழ்ந்தான்.

மறுநாள், நாடகம் பார்க்க வந்த மற்றவர்களும் குதிரையை அவனிடம் ஒப்படைக்க, அவற்றையும் பாதுகாத்து, சுத்தப்படுத்திக் கொடுத்தான். வருமானம் பெருகவே, குதிரை லாயமே அமைத்து, உதவிக்கு வேலைக்கு ஆள் அமர்த்தி முதலாளியாகி விட்டான்.

அதோடு விட்டானா! நாடகங்களையும் கவனித்தான். மிகப்பெரிய இலக்கிய மேதையாகி விட்டான். அந்தச் சிறுவன் தான், உலகப்புகழ் பெற்ற இலக்கியமாமேதை ஷேக்ஸ்பியர்.

மனிதர்களுக்கு எப்போது வேண்டுமானாலும் நல்ல நேரம் வரும். வருகிற சந்தர்ப்பத்தை மட்டும் கெட்டியாகப் பிடித்துக் கொண்டால், குதிரைக்காரனும் குபேரனாகி விடலாம்.

* வாய்ப்புக்களை பயன்படுத்துபவர்கள் தான் உலகினில் வெற்றிகரமாக வலம் வருகின்றனர் *



# காதலுக்கு கண் உண்டு

மலர்மதி

காதலுக்கு கண் இல்லை என்ற பழமொழி எந்த அளவுக்கு உண்மையானது என்பது மோனிகா-சுதிர் ஆகியோரின் காதலை அலசிப் பார்த்தால் புரியும். நகரத்தில் உள்ள மிக,மிக முக்கிய புள்ளி ஒருவரின் ஒரே மகளான மோனிகா எங்கே? பேருந்து நிலையத்தில் வழிப்பறி திருடனாக வாழ்க்கையைத் தொடங்கி, படிப் படியாக முன்னேறி இன்றைக்கு சமூக விரோதியாக உருவெடுத்திருக்கும் சுதிர் எங்கே? பல கோடி ரூபாய் சொத்துக்கு ஒரே வாரிசு மோனிகா. ஆனால், அந்த சுதிர்..? தாய் தந்தை யார் என்றே தெரியாத அனாதைப் பயல்.

சரி, எப்படி இருவருக்கும் இடையே காதல் மலர்ந்தது என்கிறீர்களா? அது ஒரு சுவராஸ்யமான கதை.

சுதிர் பார்ப்பதற்கு ஒரு நடிகனைப் போல் இருப்பான். நாகரீகமான உடை அணிவதில் மன்னன். இந்த இரண்டு அம்சங்கள்தான் அவனுடைய இமேஜை உயர்த்திக் காட்டின.

அன்று அந்த நட்சத்திர விடுதியின் உணவகத்தில் தோழிகளுடன் அமர்ந்து அரட்டை அடித்துக்கொண்டிருந்தாள் மோனிகா. அவளுக்கு அடுத்த டேபிளில் ஒரு கொள்ளையில் ஈடுபடப்போகும் கயவன் ஒருவனின் வருகைக்காகக் காத்திருந்தான் சுதிர்.

எதிர்பாராதவிதமாக மோனிகா கையிலிருந்த தக்காளி கெட்சப் கை தவறி விழுந்து தெறித்ததில் பக்கத்திலிருந்த சுதிர் மீதும் பட்டது. அவனுடைய வெள்ளை வெளேர் சட்டையில் தக்காளி அபிஷேகம்!

“ஐயையோ... ஐ’ம் வெரி ஸாரி...” என்றாள் உண்மையான வருத்தத்துடன்.

அப்போதுதான் அவளைப் பார்த்தான் சுதிர்.

வானத்து தேவதை பூமிக்கு இறங்கி வந்ததுபோலிருந்தது.

கிறங்கிப்போனான்.

“பரவாயில்லை. உங்க பேரு..?”

“மோனிகா.”

“ரொம்ப நல்ல பேரு..”

“தேங்க்ஸ்.” என்றவள், மீண்டும் ஒரு முறை அவனிடம் மன்னிப்புக் கேட்டுவிட்டு அங்கிருந்து மின்னல் வேகத்தில் மறைந்தாள்.

சுயஉணர்வுக்குத் திரும்ப சில நொடிகள் தேவைப்பட்டன சுதிருக்கு.

மோப்பம் பிடித்து அவளின் முழு ஜாதகத்தையும் அறிந்தான்.

ஒரு முறை அவளின் காரில் சிறு குளறுபடி செய்து வழியில் வண்டி நின்று போக, அப்போதுதான் அந்த வழியாக பைக்கில் வந்ததுபோல் பாவ்லா காட்டி, சடுதியில்

அதை சரி செய்து அவளின் இதயத்தில் இடம் பிடித்தான். எங்கெல்லாம் அவள் சென்றாளோ அங்கெல்லாம் தோன்றி மெல்ல வலை விரிக்க, எக்குத்தப்பாய்ச் சிக்கியது புள்ளிமான்.

அவனைப் பற்றி அவள் கேட்டபோது ஏதோ பிஸினஸ் செய்வதாகச் சொல்லி மழுப்பினான். மிகவும் ஜாக்கிரதையாக அவளிடம் பழகினான். அதற்காகவே அவனுடைய இழிவான தொழிலில் இருந்து முழுமையாக ஒதுங்கி இருந்தான். விலை மதிப்பற்ற ஓர் அழகு மங்கை தன்னிடம் சிக்கியிருப்பது தன்னுடைய மாபெரும் பாக்கியமாகக் கருதினான். அவள் கை நழுவிப் போய்விடக்கூடாது என்பதில் குறியாக இருந்தான். சரளமாகப் பேச ட்யூஷன் வைத்து ஆங்கிலமும் கற்றான்.

அவனுடைய இந்தப் போலியான காதல், கல்யாணத்தில் முடிந்துவிடுமாயின் பிறகு கேட்கவே வேண்டாம். கோடீஸ்வரனாகிவிடலாம். அவனுடைய திருட்டுப் புத்தி வேறு விதமாகக் கணக்குப் போட்டது.

***

மோனிகா ஜுவல்லர்ஸ் ஏக பரபரப்பில் இருந்தது. நெருக்கியடிக்கும் வாடிக்கையாளர்களின் கூட்டம்.

நகைக் கடைக்கு எதிரில் காரை நிறுத்திய மோனிகா, “வாங்க, சுதிர். என் அப்பாவோட குரூப் ஆஃப் கம்பெனீஸ்ல இந்த நகைக் கடையும் ஒண்ணு.” என்று சொல்லிக்கொண்டே இறங்க, அவளைத் தொடர்ந்து சுதிரும் இறங்கினான்.

நகைக் கடைக்குள் நுழைந்து தங்க-வைர நகைகளைக் கண்டபோது அவன் நாக்கில் ஜலம் ஊறியது.

“சுதிர்.. கொஞ்சம் இருங்க, நான் கணக்கைப் பார்த்துட்டு வந்திடறேன்.” என்றவாறு மோனிகா கௌண்டரை நோக்கி நகர, சுதிர் மெல்ல கடையை நோட்டம் விட்டான்.

பலவிதமான நகைகள் அவன் கண்ணைப் பறித்தன. அவற்றைப் பார்த்துக் கொண்டே வந்தவன், ஓரிடத்தில் கனமான தங்கச் செயின் ஒன்று கேட்பாரற்றுக் கிடப் பதைக் கண்டான். கூட்டம் அதிகமாக இருந்ததால் அந்த நகையை எடுத்துவைக்க மறந்தவராய் வாடிக்கையாளர் கேட்ட வேறு நகை எடுப்பதில் மும்முரமாய் ஈடுபட்டிருந்தார் சேல்ஸ்மேன்.

சுதிர் சுற்றிலும் ஒரு முறை பார்த்தான். யாரும் கவனிப்பதாய் தெரியவில்லை.

ஒரு மனிதன் எவ்வளவுத்தான் தன்னை மாற்றிக்கொண்டாலும், அவனுடைய சுபாவம் மட்டும் மாறவே மாறாது என்பதற்கு சுதிர் ஓர் எடுத்துக்காட்டு. கண்ணிமைக்கும் நேரத்தில் அதை எடுத்து பேண்ட் பாக்கெட்டில் பதுக்கிக் கொண்டான்.

சிறிது நேரத்தில் சேல்ஸ்மேன் திடீரென்று அலறினார்:

“எப்படி.. எப்படி..?” என ஓடி வந்தார்

மேனேஜர்.

“இங்கேதான் சார் வெச்சிருந்தேன்ஞ்” என்றார் அந்த சேல்ஸ்மேன் கலவரமாய். வியர்வை அவர் முகத்தில் முத்து, முத்தாய்ப் பூத்திருந்தது.

“யாராவது எடுத்திருக்கீங்களா?” என்று மேனேஜர் கேட்க, “இல்லை” என்ற பதில்தான் வந்தது வாடிக்கையாளர்களிடமிருந்து.

“சரி, இங்கே இருக்கிறவங்களை சோதிக்கிறவரை ஒருத்தரையும் வெளியே விடாதீங்க. அதே போல் யாரையும் உள்ளே அனுமதிக்காதீங்க.” என்று மேனேஜர் உத்தரவிட, செக்யூரிட்டி ஆஃபீசர்கள் வாயிலை அடைத்துவிட்டார்கள்.

சுதிருக்கு தூக்கி வாரிப் போட்டது.

ஒவ்வொருவராய்ச் சோதனை செய்ய ஆரம்பித்தார்கள்.

எல்லோரையும் பார்த்தாகிவிட்டது. சுதிர் மட்டும்தான் பாக்கி.

“சார்... இப்படி கொஞ்சம் வர்றீங்களா?”

மேனேஜர் அழைத்ததும் வியர்த்து விட்டான் சுதிர். ஏன்தான் இந்த அல்பத் தனமான காரியத்தச் செய்தோமோ என்றாகிவிட்டது அவனுக்கு.

அவன் அவரை நெருங்கியபோது, மோனிகா குறுக்கிட்டாள்.

“இவர் என்னுடன் வந்தவர்.”

“ஓ.. ஐ ஆம் ஸாரி மேடம்.” என்று ஒதுங்கினார் மேனேஜர்.

சுதிருக்கு போன உயிர் திரும்ப வந்ததுபோல் இருந்தது.

“பரவாயில்லை, நகை இடம் மாறி இருக்கலாம். கடை மூடும்போது சரி பார்த்துக்கலாம். இனிமேல் ஜாக்கிரதையா இருங்க” என்று மோனிகா சொன்னதும் நன்றி உணர்ச்சியுடன் அவளைப் பார்த்து கரம் குவித்தார், எங்கே தன் வேலைக்கு வேட்டு விழுமோ என்று அஞ்சியிருந்த அந்த ஏழை சேல்ஸ்மேன்.

***

கடற்கரை ஓரமாக வண்டியை நிறுத்திவிட்டு இறங்கினாள் மோனிகா.

சுதிர் இறங்கியதும், “அந்த செயினை

---

**ஆசிரியரை நினைத்து
வைத்தார்களோ பெயர்
"அடி"ஸ்கேல்.**

**பயத்தில் கொசு
டெங்குவை பரப்பினால் தண்டனை
அறிவிப்பால்.**

**கோவில்களின் பலன்
கிடைக்கும் வழிவிடுவதால்
108க்கு.**

**மல்லிகைப்பூ வாங்கினான்
மனைவிக்கு பிடிக்குமென
அவள் படத்திற்கு.**

**பாலக்கிருட்டிணன்**

எடுங்க சுதிர்!" என்றாள்.

திடுக்கிட்டான்.

"செ..செயினா..? எந்த செயின்..?"


"சும்மா நடிக்காதீங்க சுதிர். நீங்க அந்த செயினை எடுத்ததை நான் சி.சி.டி.வி. கேமெராவில் பார்த்துட்டேன். பலர் முன்னால உங்க மானம் போயிடும்னு நெனைச்சுத்தான் உங்களை செக்யூரிட்டியிடமிருந்து காப்பாத்தினேன்."

தான் வகையா மாட்டிக்கொண்டதை அறிந்த சுதிர் நிலைமையைச் சமாளிக்க முற்பட்டான்.

"அதுவா மோனிகா? உங்க நகைக் கடை ஸ்டாஃப் எந்த அளவுக்கு ஜாக்கிரதையா இருக்காங்கன்னு செக் பண்ணத்தான் நான் அதை எடுத்தேன்..." என்று சொல்லிக்கொண்டே அந்த செயினை எடுத்தான் சுதிர்.

'வெடுக்'கென அதைப் பிடுங்கிக் கொண்ட மோனிகா, "கேவலம், ஒரு செயினைத் திருடி உங்க புத்தியைக் காட்டிட்டீங்களே.. என்கிட்ட கேட்டிருந்தாலே நான் கொடுத்திருப்பேனே. உங்களை நான் மணந்துக்கலாம்னு இருந்தேன். நல்ல வேளை சரியான சமயத்தில் உங்க சுயரூபம் வெளிப்பட்டதுக்கு அந்த ஆண்டவனுக்குத்தான் நன்றி சொல்லணும். இனி என் முகத்துல முழிக்காதீங்க." என்று சொல்லிவிட்டு வண்டியில் ஏறி பறந்துபோய்விட, வாழ்க்கையில் முதல் முறையாக அடிபட்ட தன் முட்டாள்தனத்தை எண்ணி கூனி, குறுகி நின்றான் சுதிர். ■

# இன்பமாய்...



பூத்துச் சிரிக்கும்
ஒரு பூவின் புன்னகை...

கவிழ்ந்து வெட்கும்
மற்றொரு மலரின் நாணம்...

முகம் தொட்டுப் பறக்கும்
வண்ணத்துப் பூச்சி...

காதோரம் கதை சொல்லிப்
பாடும் தட்டான்...

விரல் தடவிச் செல்லும்
பொன்வண்டு...

தாவித் தாவி மரமேறிச் சிரிக்கும்
அணில் பிள்ளை...

அற்புதமாய்
இசை மீட்டும்
கருங்குயில்...

ஒய்யாரமாய் உட்கார்ந்து
கத்தும் காக்கை..

வானிலிருந்து விழுந்தாலும்
எவர் மேலும் காயப்படுத்தாமல்
பூப்போல் சிரித்துச் சிதறும்
மழைத்துளி...

அட...
எவ்வளவு இருக்கிறது
இன்பமாய்...
வாழ்க்கை....

- **அத்தாவுல்லா**



# திவ்யா கல்யாணம்

“எனக்கு இந்த கல்யாணத்துல விருப்பம் இல்லைப்பா...” என்று கூறிய திவ்யாவை அவர் தந்தை தேவராஜ் எரித்து விடுவதுப் போல் பார்த்தார்!

“இந்த கல்யாணத்துல விருப்பம் இல்லைனு நீ பெண் பார்க்க வந்த அன்னைக்கே சொல்லி யிருக்கலாமே?

அப்போ கூட வேணாம்... நிச்சயதார்த்தம் அன்னைக்காவது சொல்லிருக்கலாமே?

நாளைக்கு கல்யாணத்தை வெச்சிகிட்டு இப்போ வந்து இப்படி சொன்னா என்ன அர்த்தம்... பேொரிந்து தள்ளினார் தேவராஜ்!

இங்க பாருங்கப்பா எனக்கு சின்ன வயசுல இருந்தே உங்க தங்கச்சி பையன் அதான் என் அத்தை மீனாட்சியோட பையன் அருணை ரொம்ப பிடிக்கும் ..பள்ளி முதல் கல்லூரி வரை ஒண்ணா தான் படிச்சோம் .எனக்கும் அவன் மேல காதல் இருந்தது, அவனுக்கும் என் மேலே காதல் இருந்தது, இடையிலே நமக்கு காசு வந்து உறவை மறந்துடீங்க வீடு தேடி பொண்ணு கேட்டு வந்த மீனாட்சி அத்தையையும் அசிங்க படுத்தி அனுப்பிடீங்க ,ஓடி போய் கல்யாணம் பண்ண எனக்கு விருப்பம் இல்லை மனசுக்கு பிடிச்ச, எனக்கு உரிமை உள்ள அத்தை பையனை கட்டிக்கிடறதுக்கு என் விருப்பம் போதும்ப்பா.. நீங்களே கல்யாணத்த நிறுத்தி அருணோட சேர்த்து வைப்பீங்கனு நம்புறேன் .. உங்க மானம் மரியாதையை காப்பாத்தணும் என்கிறதுக்காகதான் அருணோட ஓடி போகலை , முன்னாடி நான் அருணை கட்டிக்கிடணும்னு சொல்லி இருந்தாலும் உங்க வறட்டு பிடிவாதம் ஏத்துக்கிடாது அதனாலே தான் இப்ப சொல்லுறேன்ப்பா .என்னை மன்னிச்சிடுங்க என்றாள் திவ்யா .

தேவ ராஜ் தன் தவறை உணர்ந்தார் ...நம்ம பிடிவாதத்துக்காக நான் பெத்த புள்ளைய கஷடப்படுத்த கூடாது? யார் அவன் நம்ம தங்கச்சி பையன் தானே என்று சமாதானம் ஆனார் ..ஏற்கனவே திருமணம் நிச்சயிக்க பட்ட மாப்பிள்ளை வீட்டாரிடம் சமாதானம் பேசினார் தேவராஜ் ..மாப்பிள்ளையும் மாப்பிள்ளை வீட்டாரும் சந்தோசப் பட்டனர்.. சம்பந்தி நான் சொன்னா தப்பா எடுத்திக்க மாட்டீங்களே பொண்ணு பார்க்க வந்த அன்றைக்கே உங்க பெரிய பொண்ணு திவ்யாவை விட அவ தங்கச்சி ரம்யாவை தான் என் பையனுக்கு பிடிச்சிருந்தது ஆனா நீங்க ஊர்லயே பெரிய ஆளு ,கோபம் வந்தா அடிக்க கூட அஞ்ச மாட்டீங்கனு தான் பார்க்க வந்த திவ்யாவை எங்க பையனுக்கு கட்டிக்க சம்மதிச்சோம், உங்க ரெண்டு பொண்ணும் தேவதைங்க தான் ஆனா என் பையனுக்கு உங்க சின்ன பொண்ணு ரம்யாவை தான் பிடிச்சிருக்கு.. நீங்க தப்பா நினைக்கலைனா உங்க சின்ன பொண்ண கட்டி தரீங்களா? என்றனர் நானும் இதை தான் நினைச்சேன் சம்பந்தி என்றார் தேவராஜ்...

அருண் - திவ்யா மற்றும் ரம்யா - மற்றும் ஏற்கனவே திவ்யாவுக்கு நிச்சயிக்க பட்ட அந்த மாப்பிள்ளையோடு ரம்யாவுக்கு தட புடலாய் திருமணம் நடந்து முடிந்தது ...



# உழைப்பு

| | | |
|---|---|---|
| **இலக்கு** | **–** | **உயர்ந்த இலக்கு** |
| **நம்பிக்கை** | **–** | **தன்னம்பிக்கை** |
| **உழைப்பு** | **–** | **கடின உழைப்பு** |

தோல்வி எனக்கு வேண்டும் என்று தோல்வியை எதிர்பார்த்து காத்திருப்பவரும், வெற்றி வரும்போது ஐய்யோ! எனக்கு வெற்றி வேண்டாம் என நிராகரித்து ஓடுபவரும் இப்பூவுலகு தனில் உண்டோ?

ஒரு மனிதன் எதற்காக உழைக்கின்றான்? என்ற கேள்வியை நாம் எழுப்பினோம் என்றால் மகிழ்ச்சியாய் வாழ்வதற்காக, வாழ்வில் எந்த கஷ்டத்தையும் அனுபவிக்க கூடாது என்பதற்காக, தனது இலட்சியத்தில் வெற்றிப்பெற, உயிர்வாழ தேவையான உணவிற்காக என பல பதில்கள் வரும்.

அடிப்படையில் ஆராய்ந்தோம் என்றால் ஏதோ ஒரு காரணத்திற்காக அவன் ஒரு இலக்கை நிர்ணயிக்கின்றான். அந்த இலக்கை அடைய வேண்டுமெனில் அவன் நம்பிக்கை என்னும் மௌன ஆயுதத்தைக் கொண்டு உழைக்க வேண்டும். ஆகவே அவன் நிர்ணயித்த இலக்கை அடைவதற்காக உழைக்கின்றான்.

ஒரு சிலர் தங்கள் வாழ்வில் முன்னேறவேண்டும், வெற்றிப்பெற வேண்டும் என கூறுவார்கள் ஆனால், அவர்களிடம் சிறிதளவுக் கூட உழைப்பு இருப்பதில்லை. அவர்கள் கூற்று வெறும் வாய்ப்பேச்சாக மட்டுமே இருக்கிறது. இவர்கள் மற்றவர்களின் உழைப்பினை சார்ந்தே இருப்பார்கள்.

வேறு சிலர் ஆரம்பத்தில் ஏதோ ஓர் ஆர்வத்தால் செயல்களைச் செய்யத் தொடங்குவர் ஆனால் சோம்பல், தடங்கல் என வந்ததும் அதனை விட்டுவிட்டு வேறு பணிகளைச் செய்வர். இவர்களாலும் தொடங்கிய செயலுக்காக கடினமாக உழைக்கத் தெரியவில்லை. காரணம் அவர்களது சிந்தனை வேறாக இருப்பது, திட்டமிடாதது.

எவனொருவன் அதிக ஆர்வத்துடனும் கடின உழைப்புடனும் ஒருச் செயலைச் செய்கின்றானோ அவன் அச்செயலில் வெற்றியும் அடைவன். உழைப்பிற்கான பலன் நிச்சயம் உண்டு. உழைப்பவன் வாழ்வில் இன்பம் வந்து சேரும். சோம்பேறித்தனத்துடன் வாழ்பவனை என்றும் வறுமையே துரத்தும்.

எந்தச் செயல் வேண்டுமானாலும் எண்ணங்களாலும், சிந்தனைகளாலும் தொடங்கப்படலாம். ஆனால் அவை நிறைவுப் பெறுவது கடின உழைப்பால் தான்.

வாழ்க்கையில் நாம் வெற்றி

பெறவேண்டும், உயர்ந்த நிலையை அனைவராலும் மதிக்கப்படக்கூடிய நிலையை அடைய வேண்டும் என்றால் அதற்கும் தேவை உழைப்புதான். அதுவும் கடின உழைப்பு. ஒவ்வொரு நொடியும் உலகத்தில் வளர்ச்சி உண்டாக மனிதனின் உழைப்பு காரணமாக இருக்கின்றது. ஏன் வாழ்வதற்கு கூட உழைப்புத்தான் மூலதனமாக இருக்கின்றது.

இன்று உழைக்கவில்லை என்றால் வாழவும் இயலாது. உழைப்பு, கடின உழைப்பு, ஏன் பொறுமையான உழைப்பு கூட நம்மை கைவிடுவதில்லை. கால தாமதமானாலும் நாம் உழைத்தோமே யானால் அந்த உழைப்பின் பலன் நிச்சயம் நம்மை உயர்வடையச் செய்யும். என்றாவது ஒரு நாள் நம்மையும் பிறர் முன்னிலையில் உயர்த்திக்காட்டும்.

சர் ஐசக் நியூட்டனின் இருபது ஆண்டுக்கால உழைப்பு ஒரு சில நொடிகளில் தீக்கிரையானபோதும் கூட மனம் தளராத அவர் மீண்டும் பல ஆண்டுகள் உழைத்தார். தன் உழைப்பின் பலனை அடைந்தார்.

சிறந்த முறையில் நாம் உழைக்க வேண்டும் என்றால் நமது சிந்தனை நற் சிந்தனையாக இருக்க வேண்டும். அந்த உழைப்பிற்காக திட்டமிட வேண்டும். செய் யும் வேலையில் நிதானம் வேண்டும். இப்படி இருந்தால் மட்டுமே அந்த வேலை யை நம்மால் திறம்படச்செய்ய இயலும். அந்த உழைப்பின் பலனையும் அடைய முடியும். எடுத்தோம் கவிழ்த்தோம் என்று எந்த வேலையைச் செய்தாலும் அந்த வேலையால் யாருக்கும் எந்த பலனும் இருக்கப்போவதும் இல்லை. அதனால் நேரமும் வீணடிக்கப்பட்டு வீண் மனவருத்தங்களும் தான் ஏற்படும். வாழ்வில் முன்னேற சிந்திப்போம், திட்டமிடுவோம், பொறுமையாய் மன அமைதியுடன் உழைப்போம்.

**சு. ஜெர்லின் பிரீமா**



# அவள்

அவள் இறுதி வரை
அவளாக வாழ்ந்ததில்லை

மகளாய்
சகோதரியாய்
மனைவியாய்
தாயாய்
பாட்டியாய்

இப்படி எப்போதும்
ஓர் ஆணின்
நிழலாய் மட்டுமே இருந்து
சுயம் தொலைத்து
வாழ்ந்து வரும் அவள்

அவள் இறுதி வரை
அவளாக வாழ்ந்ததில்லை.

**சாகுல்**



# யார் பைத்தியம்?

## ஜி.ஆசிப் அலி

காதர் பாய் ஒரு கறார் பேர்வழி. எந்த விஷயமானாலும் கச்சிதமாகச் செய்து முடிப்பதில் கில்லாடி. யார் பேச்சுக்கும் போகமாட்டார். தான் உண்டு, தன் வேலை உண்டு என்றிருப்பார். 'தன்மானக்காரர்', 'ரோஷக்காரர்' என்றெல்லாம் அவருக்கு சில பட்டப் பெயர்களும் உண்டு. எங்காவது அநீதி, அக்கிரமம் நடந்தால் அதைப் பார்த்துக்கொண்டு சும்மா இருக்கமாட்டார். தலையிட்டுத் தீர்த்துவைப்பார். யாராவது அவரை வேண்டுமென்றே வம்புக்கு இழுத்தால் அவர்களுக்குச் சரியான பதிலடி கொடுப்பதிலும் அவர் வல்லவர்.

நாயர் டீக்கடையில் வழக்கமாய் செம கூட்டம். நண்பர் மரியதாசுடன் தேநீர் அருந்தப் போயிருந்தார் காதர்.

யாரோ ஒருவன் திடீரென்று காதரைப் பார்த்து வாய்க்கு வந்தபடி ஏதேதோ பேச ஆரம்பித்தான். மெதுவாக ஆரம்பித்து பின் அறுவெறுக்கத்தக்க வார்த்தைகளால் விளாச ஆரம்பித்தான் அவன்.

அவனுடைய அந்த பேச்சு எரிச்சலை ஊட்டுவதாக இருந்தது.

அவ்வளவுத்தான், இனி காதர் பாய் அவனை சும்மா விடப்போவதில்லை. சரமாரி யாக விளாசித் தள்ளப்போகிறார் என அதிர்பார்த்த கூட்டம் ஆவலோடு கவனித்துக்கொண்டிருந்தது.

என்ன ஆச்சரியம்?

காதர் எதுவுமே பேசவில்லை. அமைதியாக தேநீர் அருந்திக்கொண்டிருந்தார்.

ரோஷக்காரருக்கு என்ன ஆயிற்று?

ஏன் இந்த மௌனம்?

புரியாமல் குழப்பமடைந்தனர் கூடி இருந்தவர்கள்.

அவனுக்கு வாய் வலித்திருக்கவேண்டும். கண்டபடி கூச்சலிட்டுவிட்டுப் போய் விட்டான்.

நண்பர் மரியதாசுக்கும் வியப்பு.

"என்ன காதர் நீ? அவன் பாட்டுக்குக் கத்திட்டுப் போறான். நீ என்னடான்னா ஒண்ணுமே பேசாம நிக்கறே? எங்கே போச்சு உன்னோட ரோஷம்?" என்று அடக்கமுடியாமல் கேட்டேவிட்டார் மரியதாஸ்.

காதர் பாய் என்ன சொல்லப் போகிறார் என்று கேட்க அவரைச் சுற்றி நின்றது கூட்டம்.

"இதோ பாரு, தாஸ், அவன் யாருன்னே எனக்குத் தெரியாது. முன்பின் அறிமுகமில்லாத அந்த ஆள் எனக்குக் கோபம் வருகிற மாதிரி காட்டுக் கத்தல் கத்தினான். பதிலுக்கு நானும் அவனோடு கத்திப் பேசி இருந்தால் பார்க்கிறவங்களுக்கு இருவரில் யார் பைத்தியம் என்று புரியாமல் போயிருக்கும். நான் அமைதியாக இருந்ததனால இப்ப ஜனங்களுக்குப் புரிந்திருக்கும்னு நினைக்கிறேன்."

அவர் சொன்ன அந்த விளக்கத்தை கேட்டு ஆச்சரியமடைந்தது மரியதாஸ் மட்டு மல்ல, அந்த ஆளை காதர் பாய் மீது ஏவிவிட்ட கும்பலும்தான்.

# காலவோட்டம்



அதிகாலை நான்குமணி பால்காரர் சைக்கிள் சப்தம்...
பருவ பெண்ணின் வெட்கமாய் வெளிவரும் சூரியன்...
காற்றை கிழித்து பறக்கும் பட்சிகள்...
எதையோ நினைத்தவாறு அசை யேும் கால்நடைகள்...
கொழுத்து வளர்ந்த பயிர்களின் வாசம்...

சும்மாட்டு கூடையோடு விரசாய் நடக்கும்
குடியானச்சிக்கள்...
தும்பை பூவில் தேனெடுக்க அலையும் சிறுவர்கள்...

ஒரு நொடி நின்று கிளம்பும் வாகனங்களின் டீசல் புகை...
பொக்கை வாயில் தம்கட்டி பிடிக்கும் சுருட்டு...

மேகமாய் நகரும் வாழ்வில்
உங்களை போலவே

எனக்கும் நேரமில்லை
நின்று ரசிக்க...

பொருளீட்டல் ஒன்றே குறியானதில்
பொருட்டாய் மதிப்பதில்லை நானும்...

சன்னல்களை இறுக சாத்தி
பிளாஸ்மாவோடு...

நீங்கள் பரவசப்படுவதை போல
நீங்கள் பகிர்வதைப் போல
நீங்கள் பிதற்றி திரிவதைப் போல
நீங்கள் பழகியதை போல

ஏர்கலப்பையோடு
எல்லாம் அனுபவித்த நானும்

இயந்திரமாய் மாறிவிட்டேன்
திருப்தியாய் வாழ்கிறேனென

உங்கள் பொய்களுக்குள்தான்
என் சொற்களும் மறைந்திருக்கின்றன!!

– கரூர்பூபகீதன்!



பார்த்த திசையிலும்
பாராத திசையிலும்
நீயே சுடர் வீசுவதால்
நானோ பொன்னொளியில்
அகப்பட்ட பெண்ணொளியே

அத்திசையிலும்
இத்திசையிலும் சலசலக்கும்
இனிய ஒலியோசையே

**ஸ்டெல்லாமேரி எம் ஜே**

# கிராமத்தான் கலீபா நோக்காடு

## நூல் அறிமுக விமர்சனம்


அட்டாளைச்சேனை எஸ்.எல். மன்சூர்





கிராமத்தான் கலீபா பொத்துவில் நகரம் தந்த சிறந்த கவிஞர். கவியுலகில் பலரும் பலவிதமான சந்தங்களைக் கொண்டு கவி படைத்தாலும் கிராமத்தான் கலீபா முன்னர் நழுவி என்கிற கவிதை நூலை தந்திருந்தார். இப்போது நோக்காடு என்றொரு நோக்கை நோக்கிய உணர்வுக் கவிதையை தந்திருக்கிறார்.

வகவம் தொடக்கம் பல்வேறு இலக்கிய நிகழ்வுகளில் தன் கவித்துவத்தினால் கிராமத்தான் கலீபா முத்திரை பதித்தவர். இவரது கவிதைகள் படிக்கின்றபோது சற்று வித்தியாசமான உணர்வினைக் கொடுக்கும். வாசிக்கும் வாசகர்களுக்கு கவி நயம் புரியச் செய்வதில் கிராமத்தான் கவிதைகள் உணர்ச்சி பூர்வமானதாகவே இருக்கும். பொதுவாக ஓர் இலக்கிய நூல் வெவ்வேறு மனநிலைக்கு வெவ்வேறு உணர்ச்சி களை எழுப்பக் கூடியதாக இருக்கும். சாதரணமாக பார்க்கின்றபோது ஒருவருக்கு இளமையில் ஒருவகை உணர்ச்சியும் வளர்ந்த பின் மற்றொருவகை உணர்ச்சியும் முதுமையில் வேறொரு வகை உணர்ச்சியும் அளிக்க வல்லது. உணர்ச்சிவடிவமான மனம், என்றும் ஒரேநிலையில் இருப்பதில்லை ஆகவே இலக்கிய அனுபவம் பலர்க்குப் பலவகையாகவும் ஒருவருக்கு காலத்திற்கேற்ப சில வகையாகவும் வேறுபடுகிறது. இவ் வேறுபாடானது, இலக்கியத்தின் நெடுங்காலக் கவர்ச்சிக்கு ஒரு காரணமாக அமைகிறது எனலாம். அந்தவகையில் நோக்காடு நினைக்கச் செய்கிறது. காலம் கடந்தாலும் நோக்காடு நோக்காடாகவே இருக்கிறது. வித்தியாசமான உணர்வுகளோடு நித்தம் நிதம் நின்று நிதானித்துக் கவிபாட அழைக்கிறார் கிராமத்தான் கலீபா.

இருபத்தேழு கவிதைகளுடன் நோக்காட்டை இலகுபடுத்தியிருக்கிறார் கவிஞர். நோக்காடு என்றொரு தலைப்பில் இவ்வாறு கவிதையணியை தருகின்றார் கவிஞர் கிராமத்தான்.

**‘உறவை அழைத்தேன் பிரிவு வந்தது**
**உதவ நினைத்தேன் பரிவு வந்தது**
**கனவை நினைத்தேன் நினைவு வந்தது**
**நினைவைப் பிளந்தேன் தெளிவு வந்தது.**
**பாசம் விதைத்தேன் வேஷம் வளர்ந்தது**
**நேசம் அறுத்தேன் துரோகம் வளர்ந்தது...**

இவ்வாறு நோக்காட்டின் வேக்காட்டினை கவிதையில் மிக அழகாக உறவின் ஊடலுக்குக் கிடைத்த பரிசின் விளைவிது




எனும் விளக்கத்துடன் தன் கவிதைத்துளிகள் ஊடாக நோக்காடாக்கியிருக்கிறார் கவிஞர்.

மனிதனாக நீ வாழ எனும் தலைப்பில் மனிதன் வாழவேண்டுமாக இருந்தால் எப்படி வாழவேண்டும் என்று வேதாந்தம் கூறுகின்றார் கிராமத்தான். ஆதாவது,

**'ஏழை ஏழை என்று சொல்லி**
**எத்தனை நாள் வாழ்வது**
**தோளை நிமிர்த்தி ஏரைப்பிடித்தால்**
**துன்பம் உன்னை வெல்லாது**
**அஞ்சி அஞ்சி வாழ்வதிலே**
**இன்பம் என்ன நீ கூறு**
**கஞ்சி கூழ் போதும் என்று**
**கவலையின்றி நீ வாழு..."**

என்கிற கவிதைத் துளிவரிகள் ஆயிரம் அர்த்தம் கொள்ளும் அளவுக்கு மனிதா நீ வாழவேண்டுமாக இருந்தால் இவற்றைக் கற்றுக்கொள்ளச் செய்கிறார் கவிஞர்.

நோக்காடு தந்திருக்கிற கவிதைகளின் தலைப்புக்களிவை. "வலிமைகள் தந்தவள், கண்மணியே நீயுணர்வாய், அஞ்சுதல், எங்கு சென்று மனுச் செய்ய, மனிதன்தானே நானும் நீயும், அருட்கவசம், அவன்தான் அரசன், அத்தர்ப்பெருச்சாளி, வேக்காட்டு வலி, வேதனைகள் போக்கிடு, குவாஸி மன்றம், நாமே நல்லவர்கள், உன்னோடு நான் பேசவேண்டும், இல்லை மகளே இன்பம் எளிது, நரக நெருப்பினை பயந்திடு, விழுத்தெழு சோதரா, வாருங்கள் கொடி ஏற்றிடுவோம், நித்தம் மனம் நோகிறதே, வலிகள் நான்கு, எல்லாம் புனிதம் தான், பாவ(வி)ச் சுமை, நம் தேசம் செழிக்கட்டும்"

போன்ற கவித்தலைப்புக்கள் நோக்காட்டை அலங்கரிக்கின்றன.

நோக்காடு வலதும் இடதுமாகி என்னை வளப்படுத்திய தன் பெற்றோருக்கும், பிறந்தகம் புகுந்தகம் ஆகியவற்றுக்கும் சமர்ப்பணமாகிறது. கிராமத்தான் கலீபாவின் சத்தான கவிதைகள் எனும் தலைப்பில் பாவேந்தல் பாலமுனை பாறூக் அன்புரை ஒன்றை வழங்கியிருக்கிறார். "லையாக்கநுட்பங்களில் தேர்ச்சிபெற்றவராக கிராமத்தான் கலீபா கலை இலக்கியப் பரப்பில் நீண்டதூரம் பயணிக்க வாழ்த்துகின்றார்" பாவேந்தல். ஒரு சொல்லின் உறைவு எனும் தலைப்பில் எங்கள் தேசம் தந்த லரீப் சுலைமான், அன்பின் தம்பி கலீபாவுக்கு எனும் தலைப்பில் கலாபூஷணம் தமிழ்த் தென்றல் அலி அக்பர் வாழ்த்துரையினையும், காலத்தை வழிநடாத்தும் கலீபாவின் உணர்வுகள் எனும் தலைப்பில் கலாபூஷணம் ஆசுகவி அன்புடீனும் வாழ்த்துரை ஒன்றை வழங்கியிருக்கிறார்.

ஆசுகவி அன்புடீன் கிராமத்தான் கலீபாவின் கவிதைகள் பற்றி இவ்வாறு ஓரிடத்தில் குறிப்பிடுகின்றார். "பல கவிதை வரிகளில் கிராமத்தான் கலீபாவின் உணர்வுகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இக்கவிஞனது உணர்வுகள் காலத்தை வழிநடாத்தும் நெம்புகோலாக அமைய

வாழ்த்துவதில் பெருமைப்படுகின்றேன்'' என்று வாழ்த்துகின்றார். காலம் எனக்கு கவிதை சொல்லித் தருகிறது எனும் தலைப்பில் நூலாசிரியர் நோக்காடு எந்தப் பிரசவமும் இன்றி நிகழ்ந்துவிடுவதில்லை. இங்கு நோக்காடுகளே பிரசவமாகியிருக்கிறது. இந்த நோக்காடு தனது இரண்டாவது பிரசவம். காலம் எனக்குக் கவிதை சொல்லித்தருகிறது. கவிதை எனக்கு வாழச் சொல்லி-யிருக்கிறது. வாழ்க்கைமீதான எண்ணம் உயர்வானது. அழகானது. இந்த வலிகளின் தொகுதியால் எனது உணர்வுகளை வெளிப்படுத்தியிருக்கிறேன்'' என்கிறார் நோக்காட்டின் ஆசிரியர் கிராமத்தான் கலீபா.

பின் அட்டையில் வகவத்தின் தலைவர், கலாபூஷணம் என். நஜ்முல் ஹுசைன் ''எங்கள் இதயங்களில் இப்போது பெரிய நோக்கோடு, நோக்காடு கொண்டு வந்திருக்கிறார். கிராமத்தான் கலீபாவின் இந்த நல்ல நோக்கம் நிறைவேற இதயபூர்வமான வாழ்த்துக்கள்'' கூறுகின்றார். மொத்தத்தில் வலியின் சுவைஞகளை தீர்க்கதரிசனத்துடன் நோக்காடாக்கி, நோக்கோடு நோக்கியுணர்வுக்குள் வாசிக்கச் செய்கிற வித்தியாசமான கவிதைகளை கிராமத்தானால்தான் வழங்க முடியும். அந்த நோக்கை இப்போது நோக்காடு எனும் நூல்வழியாக தந்திருக்கிறார். கலை இலக்கியப் பரப்பில் பொத்துவில் மண்ணுக்கு நிறைந்த மணம் இருக்கிறது. அந்த பல மணங்களில் இவரும் ஒரு மணம். நாடு காத்த வீரன்போல தன் பேனாமுனை கொண்டு கவியாக்கம் படைத்திருக்கும் படைப்பாளி கிராமத்தான் கலீபா. தன் வீரம் கொண்டு கவிதையாடல்கள் இனிதொடர நாம் வாழ்த்துவோம். வாழ்க கிராமத்தான் கலீபா.

நூல் : நோக்காடு (கவிதைகள்)
நூலாசிரியர் : கிராமத்தான் கலீபா
வெளியீடு : உம்மா பப்ளிகேஷன்
விலை : 300 - LNR

# முத்தமிடுதலின் சகாப்தம்

அவன் முத்தத்தை அடைந்தே தீருவேனென
பிடிவாதம் பிடிக்கிறான் அவளிடம்.
முத்தம் எச்சிலால் ஆனது.
முத்தமென்பது வெறும் முத்தமல்ல.
ஒருவர் மீதான காழ்புணர்ச்சியை சதியை
எளிதாய் அணைத்துவிடுகிறது முத்தம்.
மனிதர்களுக்கும் விலங்குகளுக்கும் உள்ள
ஓரே வித்தியாசம் முத்தமிடுதல் மட்டுமே.

வீழ்த்தப்பட்டவர்களின் வாழ்வில் முத்தம்
மாபெரும் சகாப்தத்தை
ஏற்படுத்தியிருக்கிறது.
ஆண்டனி தனது உயிர்பிரிதலின் தருணத்தில்
கடைசி ஆசையாய் கேட்டது
கிளியோபாட்ராவின் முத்தத்தை தான்.

முத்தமிடுதலின் உணர்ச்சியை அறிந்தவர்கள்
அதற்கான காரணத்தை
அறிந்துகொள்வதில்லை.
முத்தம் அகவைக்கு அகவை
மாறுபட்டிருக்கிறது
தவிர முத்ததிற்கு எந்த அகவையுமில்லை
முத்தமிடாதவர்களும்
முத்தமடையாதவர்களும்
மீளமுடியாத வதையில் சபிக்கப்பட்டவர்கள்.

எனக்கு உண்மையில் எந்த வயதில்
எந்த ஆண்டில் எந்த மனிதரால்
முதல் முத்தம் கிடைத்தது என்று
தெரியவில்லை.
என் பால்ய வயதிலும்
பொக்கைவாய் பருவத்திலும்
முத்தம் இச்சையாகவே தோன்றவில்லை

வாழ்வில் அனைத்தும் இழந்து
பரதேசியாய் வாழும் என்னிடம்
உனக்கு கொடுக்க
என்ன இருக்கிறது
மாபெரும் முத்தத்தைத் தவிர.

**மனோபாரதி,**

# தசாவதார நினைவுகள்...

– கல்யாண்குமார்



தமிழ்நெஞ்சம் வாசகர்களுக்கு முதலில் என்னை அறிமுகப்படுத்திக் கொள்கிறேன்.

தாய், இந்தியா டுடே, புதிய தலைமுறை ஆகிய பத்திரிகைகளில் உதவி ஆசிரியராக பணியாற்றி இருக்கிறேன். இருந்தாலும் சினிமா ஆர்வம் ரத்தத்திலேயே ஊறிப் போயிருந்ததால் என் தொடர்புகளை அங்கேயும் விரிவுபடுத்திக் கொண்டிருந்தேன். இயக்குனர் மணிவண்ணனின் நூறாவது நாள், இளமைக் காலங்கள் உட்பட சுமார் 10 படங்களுக்கு உதவி இயக்குனராகப் பணி புரிந்தேன். கே. ரங்கராஜின் நினைவே ஒரு சங்கீதம், பாடு நிலாவே, கீதாஞ்சலி உட்பட 6 படங்களுக்கு உதவி இயக்குனராக இருந்திருக்கிறேன்.

சினிமாவிற்கான கூட்டு முயற்சி அனைத்தும் சூழ்நிலை கருதி தள்ளிப்போனாலும், கூடிய விரைவில் இயக்குனராகவும் அறிமுகமாவேன். ஆசிரியர் திரு. தமிழ்நெஞ்சம் அமின் அவர்களின் அறிமுகம் கிடைத்து. அவரோடு பேசிக் கொண்டிருக்கையில் நான் பணிபுரிந்த தசாவதாரம் படத்தின்போது ஏற்பட்ட அனுபவங்களை நமது வாசகர்களோடு பகிர்ந்து கொள்ளுங்களேன் என்று பணித்தார். அந்த தசாவதார அனுபவங்களில் சிலவற்றை உங்களோடு பகிர்ந்து கொள்வதில் மகிழ்கிறேன்.

நான், கதாசிரியர் கமலேஷ் குமார், நடிகர் ரமேஷ் கண்ணா, கிரேஸி மோகன், பொன். குமரன், ஆகியோர்தான் இயக்குனர் கே.எஸ்.ரவிகுமாரின் ஆஸ்தான கதைவிவாதக்குழுவைச் சேர்ந்தவர்கள்.



சிம்பு, ஜோதிகா நடிப்பில் வெளியான சரவணா என்ற படத்தின் வெளியீட்டிருக்காக காத்திருந்த நேரம்.

ஒரு நாள் இயக்குனர் எங்களை அழைத்தார். " கமல் சார் அமெரிக்காவிலிருந்து போன் செய்திருந்தார். அடுத்த படத்தோட தலைப்பு தசாவதாரம், அதில் நான் பத்து கேரக்டர்களில் நடிக்கவிருக்கிறேன். தயாரிப்பு ஆஸ்கார் பிலிம்ஸ். நீங்கதான் இயக்குனர். அதுக்கு ஒரு அவுட் லைன் ரெடி பண்ணுங்க. நான் இன்னும் பத்து நாள்ல வந்திருவேன்" என்று சொன்னதாக அவர் எங்களிடம் சொல்லி விட்டு எங்களை ஆளுக்கொரு அவுட் லைன் ரெடி பண்ணச் சொன்னார். நாங்களும் ஒரு ஐந்து நாட்கள் எடுத்துக் கொண்டு ஆளுக்கொரு அவுட்லைனை அவருக்குக் கொடுத்தோம். அனைத்தையும் மெயில் மூலமாக கமலுக்கு அவர் அனுப்பினார். அனைத்தையும் படித்துப் பார்த்த கமல் ரொம்பவே உற்சாகமாகிவிட்டார். அமெரிக்காவிலிருந்து வந்ததும் நேரே இயக்குனர் அலுவலகம் வந்தவர் எங்கள் அனைவரின் அவுட்லைன்களையும் படித்ததாகவும் அதில் சுவராஸ்யமான கேரக்டர்களை உருவாக்கியவர்களை தனித்தனியே பாராட்டிவிட்டு அதன் அடிப்படையில் அவர் ஒரு அவுட்லைன் அமைத்திருப்பதாகவும் சொன்னார். பல்வேறு கேரக்டர்கள் அலசப்பட்டன.

படத்தில் என்னவோ பத்து கேரக்டர்கள்தான். நாங்கள் உருவாக்கியிருந்தது நூற்றுக்கும் மேற்பட்டது. கதை விவாதத்தில் படிப்படையாக எதிலெதில் சிறப்புத்தன்மை இருக்கிறதோ அதை மட்டுமெடுத்துக் கொண்டு கேரக்டர்களை மெருகேற்றிக் கொண்டே வந்தோம்.

ஆரம்பத்தில் கமல் சொன்னதில் ஒரு நாத்திகன் கேரக்டர்தான் படத்தின் கதாநாயகன். திராவிடக் கட்சியின் மேடைகளில் பேசும் ஒரு முரட்டு இளைஞன். அவன் ஒரு பாடல் காட்சியில் அறிமுகமாவது போல காட்சியை அமைத்திருந்தார் கமல். பாடலின் பல்லவியையும் அவரே சொன்னார்.

" சுவாமியே பொய்யப்பா.." என்று அந்தப் பாடல் வரிகளின் முதல் வரியைக் கேட்டதுமே இயக்குனர் உடனே அவரை மேலே சொல்லவிடாமல் தடுத்துவிட்டார்.

" நான் பதினேழு வருஷமா மாலை போட்டு தொடர்ந்து சபரி மலைக்கு போயிட்டிருக்கேன். என் படத்தில் இப்படியொரு பாடல் வந்தால் எங்கள் வீட்டிலேயே என்னை செருப்பால அடிப்பாங்க. அதுனால இந்தக் கேரக்டரே

படத்துல வேண்டாம் "என்று அதிரடியாய் சொல்லிவிட்டார்.

இப்படி அவர் ஒரு கேரக்டரைச் சொன்னால் இயக்குனர் தரப்பில் எதிர்ப்பு. எங்கள் தரப்பில் ஒரு கேரக்டரைச் சொன்னால் கமல் தரப்பில் எதிர்ப்பு அல்லது மறுப்பு. இப்படி பலவிதமான கேரக்டர்கள் அந்தக் கதை விவாத அறையிலேயே உருவாகி அங்கேயே மரித்தும் போயின.

கிரேஸி மோகன் சொன்ன ஒரு சரித்திர கேரக்டர் கமலுக்கு மிகவும் பிடித்துப் போனது. இயக்குனருக்கும் அதில் திருப்தி. படத்தின் ஆரம்பத்தில் அந்தக் கேரக்டரை வைத்து கதையை துவக்குவதாக முடிவானது. அதன்பிறகு கதை, நிகழ்காலத்திற்கு வந்து அமெரிக்காவில் வாழும் ஒரு தமிழ் விஞ் ஞானியின் பார்வையில் கதை விரிவதாக திரைக்கதை அமைக்கப்பட்டது.

எழுத்தாளர் சுஜாதாதான் இதற்கு வசனம் எழுதுவதாக முடிவு செய்யப்பட்டு படத்தின் முதல் அறிவிப்பு போஸ்டரிலும் அவரது பெயர் இடம்பெற்றது. ஆனால் படம் ஆரம்பிக்கவிருக்கும் நிலையில் அவர் இயற்கையெய்திவிட்டதால் வசனப் பொறுப்பையும் கமலே ஏற்றுக் கொண்டார்.

பத்து கேரக்டர்களை உருவாக்கி அதை கோர்வையாக இணைத்து அதற்கு திரைக்கதை வடிவம் கொடுத்து வசனம் எழுதி முடிக்க எங்கள் அனைவருக்குமே ஒரு வருடம் தேவைப்பட்டது. தயாரிப்பாளர் கதைக்காக





செலவு செய்துகொண்டே பொறுமை காத்தார். அந்தப் பொறுமை ரிலிசுக்குப் பின் அவருக்குப் பல கோடிகளை வசூலித்துக் கொடுத்தது என்பதுதான் உண்மை. தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், ஹிந்தி என்று இந்தியாவிலேயே பல மொழிகளில் தசாவதாரம் வெளியிடப்பட்டது. வெளிநாடுகளிலும் நமது உலகத்தமிழர்களின் ஆதரவோடு வசூலில் மிகப்பெரிய வெற்றி கண்டது.

எங்கள் திரைக்கதை விவாதக் குழுவில் என் ஒருவனுக்குத்தான் கம்ப்யூட்டரில் தமிழில் டைப் அடிக்கத் தெரியும் என்பதால் என்னை கமலோடு அனுப்பி வைத்து விட்டார் இயக்குனர். முழு வசனமும் எழுதி டைப் செய்து ஒரு ஃபைலில் போட்டு வந்தால் மட்டுமே படப்பிடிப்பு துவங்கும் என்று கறாராகச் சொல்லிவிட்டார். இது அவருடைய பாணி. கமல் படத்திலும் அதைக் கடைபிடித்தார்.

கிட்டத்தட்ட மூன்று நான்கு மாதங்கள் நான் கமலோடு பயணித்தேன். தினமும் அவரது ஆழ்வார்பேட்டை அலுவலகத்தில் காலை பத்து மணிக்கே வேலைகள் துவங்கிவிடும். கமல் சொல்லச் சொல்ல அதை நான் கணினித் தமிழில் டைப் அடிப்பேன். முதல் நாள் நான் மிக வேகமாக தமிழில் டைப் அடிப்பதைப் பார்த்துவிட்டு ' என்னங்க கல்யாண், தபேலா வாசிக்கிற மாதிரி தூள் கிளப்புறீங்க ' என்று முதுகில் என்னைத் தட்டிக் கொடுத்தார்.

பத்து கேரக்டர்களில் கமல் மிகவும் ரசித்துச் செய்தது, பல்ராம் நாயுடு கேரக்டரைத்தான். தினம் தினம் அந்த கேரக்டருக்கு மெனக்கெட்டு வசனங்களை அவர் உருவாக்குவார். படப்பிடிப்பு தளத்தில் கூட அந்தக் கேரக்டரின் மேக்கப்போடு கமல் செட்டுக்கு வந்தபோது படத்தின் கலைஞர்கள் பலருக்குமே அவரை அடையாளம் தெரியவில்லை. முதல் நாள் அவரை அனைவருக்கும் இயக்குனர் அவரை இப்படித்தான் அறிமுகம் செய்துவைத்தார்.

“தெலுங்குப் பட ஃபைனான்சியர் பல்ராம் நாயுடு” என்றே சொன்னார். அவருடன் சேர்ந்து நடித்த டான்ஸ் மாஸ்டர் ரகுராம் கூட அதை நம்பி விட்டார். பிறகு விஷயம் தெரிந்து அனைவருமே ஆச்சர்யப்பட்டுப் போனார்கள். அந்த அளவுக்கு கமல் அந்தக் கேரக்டராகவே மாறிப் போயிருந்தார். அதனாலேயே அந்தக் கேரட்டருக்கு மீண்டும் உயிர் கொடுத்து சபாஷ் நாயுடு என்று தன் அடுத்த படத்தையும் ஆரம்பித்துவிட்டார். விஸ்வரூபம் 2 வுக்குப் பிறகு அந்தப் படம் வெளியாகும்.
படத்தின் படப்பிடிப்பு நடந்து கொண்டிருக்கும்போது எனது சில பல்லவிகளும் சில சரணங்களும் என்ற கவிதை தொகுப்பு வெளியிடத் தயாராகி இருந்தது. அதை ஒரு வெளியீட்டு நிகழ்ச்சி ஏற்பாடு செய்து கமல் வெளியிட எங்கள் இயக்குனர் கே எஸ் ரவிகுமார் பெற்றுக் கொள்வதாகத் திட்டம். ஆனால் படப்பிடிப்பு பணிகள் மிக கடுமையாக, இரவு பகலாக தொடர்ந்து கொண்டே இருந்தது.

ஒருநாள் என்னை இயக்குனர் அழைத்தார். ” இந்த டென்ஷன் நாட்களில் உங்கள் புத்தக விழாவிற்கு தேதி ஒதுக்கி விழா நடத்துவது கஷ்டம். அதனால் படப்பிடிப்பு தளத்திலேயே அதன் வெளியீட்டு விழாவை நடத்திக் கொள்ளலாம் ஓக்கேவா? ” என்றார். நான் உடனே சம்மதம் சொல்லிவிட்டேன்.

படத்தின் இறுதிக் கட்டத்தில் வரும் ஆஸ்பத்திரி காட்சிகள் படமாகிக் கொண்டிருந்தன. கமலோடு அசினும் அப்போது உடன் இருந்தார். கொஞ்சம் ஓய்வு நேரத்தில் இயக்குனர் அனைவரையும் அழைத்தார். எனது கவிதைத் தொகுப்பு





வெளியீட்டைப் பற்றி அவரே ஒரு அறிமுகம் கொடுத்தார். குழுவினர் சுமார் 150 பேரின் கைதட்டலோடு எனது கவிதைத் தொகுப்பை கமல் வெளியிட, இயக்குனர் கே எஸ் ரவிகுமார் பெற்றுக் கொண்டார். கூடவே அசினும் வந்து ஒட்டிக் கொண்டார். நடிகர் ரமேஷ் கண்ணாவும் அதில் இருந்தார். அதுவொரு வித்தியாசமான விழாவாக இருந்தது. என் மீது இயக்குனரும் கமலும் வைத்திருந்த அன்பின் வெளிப்பாடாகவே அந்த வெளியீட்டு நிகழ்வை நான் உணர்ந்தேன்.

மறுபடி வெவ்வேறு நிகழ்வுகளின் தொகுப்போடு தமிழ்நெஞ்சம் வாசகர்களாகிய உங்களை அடிக்கடி சந்திக்கிறேன்...

தொடர்புக்கு:
kalyanchennai2010@gmail.com



ரயிலின் இரைச்சல்
அடங்கிய பின்னும்
வெகுநேரமாய்
அழும் குழந்தையை
தோளில் தூக்கி
தட்டிக்கொடுத்து
உறங்கவைக்கும் முயற்சி ..

நின்றிருந்த ரயிலருகில்
எதிர் திசையில்
வேறொரு ரயிலும்
வந்து நிற்க
ஜன்னல் வழியே
பார்த்த ஒரு பெண்ணின்
நெற்றிச்சுட்டியை கண்டு
நிறுத்திய குழந்தை
அந்த ரயில் புறப்பட
மீண்டும்
அழத்தொடங்கியது.

**பானால். சாயிராம்.**



# தண்டவாளம்

மதுரை எங்கும்
சாம்பலாகிப் போனதாய்
பாதி எரிந்ததாய்
கட்டடங்கள் சடலங்கள்
கிளம்பிவிட்ட ரயிலில்
தீக்காயங்களுடன் தொற்றி
ஏறிய முதியவர்
"கண்ணகியின் சாபத்தால்
மதுரை எரிந்தழிந்தது"
என் சகபயணி கேட்டாள்
"யார் அந்தக் கண்ணகி?"

ஸ்ரீவில்லிபுத்தூரின்
வீட்டு வாயில்களை
அலங்கரிக்கும் கோலங்கள்
வண்ண ஆடைகளில்
திருப்பாவை பாடியபடி
தெருக்களில் ஆண்கள்
பெண்கள்

கண்ணயர்ந்தேன்

பொழுது புலர்ந்த போது
சென்னை சென்ட்ரலில்
"வாசுகி அம்மையார்
அவரே தான்"
நடைமேடையில்
இறங்கிப்
பெண்கள் அவர்
பாதம் பணிந்தனர்

இந்திரப்பிரஸ்தம்
சென்றடைய
இன்னுமொரு பகலானது
பெண்கள்
பேசினர் பாடினர்
உணவு பகிர்ந்து
மகிழ்ந்தனர்

பஞ்ச பாண்டவர்
ஏறிய பெட்டியின்
குதூகலம் இரயில் முழுக்க
நிரம்பி வழிந்தது

தர்மர் பாதம்
பணிந்தோரை ஆசிர்வதித்தார்
"பாஞ்சாலி எங்கே ?"
என்ற கேள்விக்கு
புன்னகையை பதிலாக்கினார்

"கிருஷ்ணர் வரவில்லை?"
"குருக்ஷேத்திரத்தில் ரயிலேறுவார்"
பதில் கேட்டு பெருத்த ஆரவாரம்

பெட்டி பெட்டியாய் ஏறி
பிச்சை கேட்டுக்
கைதட்டிய
திருநங்கைகளுக்கே தம்
கரவொலி
எட்டவில்லை

சத்யானந்தன்

நௌஷாத் கான் .லி
அபுதாபி

# மூட்டப் பூச்சியும் அண்ணாச்சியும்

என் பேரு குமாரு நான் துபாய்ல வேலை பார்க்குறேன் என்னை பார்த்ததுமே எல்லோரும் அண்ணாச்சி என்பார்கள். அது மரியாதை யான வார்த்தையாக நீங்க நினைக்கலாம் ஆனால் அந்த வார்த்தையில் எவ்வளவு கிண்டலும் கேலியும் உள்ளது என்று எனக்கு மட்டும் தான் தெரியும் ..நான் வேலை பார்க்கும் இடத்தில் என்னை தவிர எல்லோரும் மலையாளிகள் எல்லோருமே நல்ல கலரு நான் மட்டும் தான் காக்காவை போல இருப்பேன் அதுவும் நான் ஒரு பச்சை தமிழன், என்னை பார்த்தாலே கேலியும் கிண்டலும் தான். என் கலரை பற்றி, என் தோற்றத்தை பற்றி என் மொழியை பற்றி கிண்டலடித்து கொண்டே யிருப்பார்கள்.

ஒரு மலையாளியை சமாளிப்பதே கடினம் அதுவும் நூறு பேரை சமாளிப்பது என்பது எவ்வளவு கடினமான விஷயம்... என்ன அண்ணா எப்படி இருக்கே? என்று நம பாஷையை கிண்டல் அடிக்கும் போது தலைக்கு மேலே கோபம் வரும் நம் வேலை உண்டு நாம் உண்டு என்று இருந்தாலும் நம்மை வம்புக்கு இழுப்பார்கள். கோபத்தில் திட்டினாலும் நேரம் பார்த்து வேலை செய்யும் இடத்தில் ஆப்பு வைப்பார்கள். நம்ம ஊரா இருந்தா சீண்டுனவனை கைய எடுத்திடுவோம். துபாயில் சட்ட திட்டங்கள் கொஞ்சம் கடுமையானவை யாரையாவது அடித்து கொஞ்சம் ரத்தம் வந்தாலே போதும் நம்ம கதி அரோ கதி தான்... இதனால் தான் வீணாக சீண்டினாலும் அமைதியாக இருப்பேன் இது பத்தாது என்று குடும்பத்தின் கஷ்டம் வேறு அதனால் தான் 12 மணி நேர வேலை, அளவிட முடியாத டார்ச்சரிலும் பணி புரிந்தேன். காரணம் உடம்பு முடியாத அம்மா அப்பா, கடன், சொந்த வீடு கட்டும் கனவு, போன்ற காரணங்கள் தான்....

வேலை செய்யும் இடம் தான் இப்படி என்றல் இருக்க கூடிய ரூம் இதை விட மோசமாக இருக்கும் முதலில் 450 திரகம்-க்கு ஒரு ரூமில் இருந்தேன் அந்த ரூமில் மனிதர்களை விட மூட்ட பூச்சி தான் அதிகமாக இருக்கும் வந்த புதில் மூட்டை பூச்சி கடி தாங்க முடியாமல் பல நாள் தூக்கம் இல்லாமல் தவித்தேன். போக போக அந்த மூட்டை பூச்சி கடியும், வலியும் பழக்க மாகி போனது.. இந்த ரூமில் மட்டுமல்ல துபாய் -ல் பெரும்பாலான ரூம்களில் மூட்ட பூச்சி தொல்லை அதிகமாக இருக்கும் ஏனென்றால் சிறிய ரூமில் 6 அல்லது 8 பேர் கூட இருப்பார்கள் சில ரூம்களில் 10 பேர் கூட உண்டு நாம் என்னதான் சுத்தம் செய்தாலும் நம்மை போல அடுத்தவனும் இருப்பான் என்று சொல்ல முடியாது... சில பேச்சுலர் பசங்களை பற்றி சொல்ல தேவை இல்லை ஒரு ஜீன்ஸை ஒரு வாரம் துவைக்காமல்

# உழைப்பு...

ஏழையின் உழைப்பு
தன்மான பிழைப்பு..

தன் உடல் வியர்க்க
குடும்பத்திற்காய் உழைக்கும்
உயிர்....

தலையில் சுமையை சுமந்து
நெஞ்சில் அன்பை சுமக்கும்
இவனும் தாய்தானே...

உழைத்துக் கறுத்தமேனி
உணர்வாய் செழித்த உள்ளம்
உறவுக்காய் தேய்ந்த கரம்
இவன் இறைவன் தந்த வரம்..

தனக்கென
எதுவும் நினைக்காது
உனக்கென ஆசை கொள்ளும்
அன்புத் தந்தை..

பட்டபகலிலுன் பாதம் தொட்டு
உழைத்து நடு இரவில்
வலியில் துடித்து
பாதி நித்திரையில்
பாவமாய் அழுகிறாய்..

இவன் தந்தையாய்
இறைவன் அருளிய வரம்..

காத்தவூர்க்கவி.
**ஜுனைட்.எம்.பஹ்த்**
இலங்கை

போடுவது உண்டு. ஈர டவலை வெளியே காய வைக்காமல் ரூம் உள்ளேயே வைப்பதாலும், சுத்தத்தை கடை பிடிக்காமல் இருப்பதாலும், வியர்வை நாற்றத்தாலும் தான் இந்த மூட்டை பூச்சிகள் அதிகமாக உள்ளது என்ன தான் மூட்டைப்பூச்சி மருந்து அடித்தாலும் 3 மாதத்தில் திரும்ப வந்து தொல்லை கொடுக்கும். இது வரை 8 ரூம் மாறியாச்சு. எல்லா ரூம்களிலும் இதே நிலை தான். கடைசியாக ஒரு ரூம் என் சம்பளத்தை கணக்கிட்டு பார்த்தால் என் சக்திக்கு மீறிய வாடகையில் ஒரு ரூம் பார்த்தேன் என்னையும் சேர்த்து மொத்தம் ஆறு பேர். வாடகை 650 திரகம்ஸ்.. நெட், வாட்டர், எலக்ட்ரிசிட்டி எல்லாவற்றையும் சேர்த்து தான் அந்த மதிப்பு இருந்தாலும் என் தகுதிக்கு அது அதிகம் தான். இருந்தாலும் அந்த ரூமை எனக்கு பிடித்து போக இரண்டு காரணம் உண்டு. எல்லோரும் தமிழர்கள் அடுத்து அந்த ரூம் சுத்தமாகவும் பார்ப்பதற்கு கொஞ்சம் வசதியாகவும் இருந்தது. அதனால் தான் அந்த ரூமுக்கு சென்றேன் ஒரு மூன்று மாதம் நல்ல படியாய் போயிருக்கும். திடீரென்று ஒருவர் ஊருக்கு சென்று விட்டதால் அந்த பெட் பிலேஸ்க்கு ஒருவன் வந்தான் அவன் சரியாக அவன் இடத்தை சுத்தமாக வைத்து கொள்ள மாட்டான் கிட்சன் இருந்தும் படுக்கையிலே சாப்பிடுவது, குளித்த பிறகு ஈர டவலை அறையின் உள்ளேயே வைப்பது, உடுத்தும் துணியை பெட்டியில் மடித்து வைக்காமல் கசா-முசா என்று வைத்து இருப்பான் இதனாலேயே இந்த ரூமிலும் மூட்ட பூச்சி வந்து விட்டது வாரா வாரம் கிளீன் செய்தாலும் போவதில்லை பகலில் பார்த்தால் ஒரு மூட்டை பூச்சி கூட இருக்காது ஆனால் இரவில் என் தூக்கத்தை கெடுக்க எங்கிருந்து தான் வருகிறது என்று தெரியாது. எத்தனையோ முறை ஆபீஸ்-ல் நான் வேலை செய்யும் போது என்

சட்டையின் உள்ளிருந்தும் / பேண்டின் உள்ளிருந்தும் அந்த கருமம் பிடிச்ச மூட்டைப்பூச்சி வரும் ஒரு சில சமயம் உடன் பணிபுரியும் சக தோழர்கள் பார்த்து விட்டால் கேலியும் கிண்டலும் தான் மிஞ்சும் .இந்த மூட்ட பூச்சி எனக்கு அவமானத்தை தான் தேடி தந்தது ..

என் கஷ்டமும், இந்த பாழாய் போன மூட்டை பூச்சியின் தொல்லையும் தொடர்ந்து கொண்டே இருந்தது....

இந்த துபாய் நகர நரக வாழ்க்கை ஒரு மூன்று ஆண்டு கழிந்து இருக்கும். ரூம் ,சாப்பாடு போக கையில் 1200 அல்லது 1400 திரகம்ஸ் நிக்கும் ஊர் பைசா 22000 ரூபாயிலிருந்து 25000 ரூபாய் வரை மிஞ்சும் அந்த ரூபாவை தான் மாசா மாசம் ஊருக்கு அனுப்புவே. அந்த ரூபாவை கொண்டு கடன் அடைப்பதா? குடும்பத்தை பார்ப்பதா? அல்லது என் வீடு கட்டும் கனவுக்காக கொஞ்சம் சேமித்து வைப்பதா? என்ன தான் கூட்டி கழித்து பார்த்தாலும் வ ர வு க் கு மி ஞ் சி  த ா ன்  ெ ச ல வு இருக்கும். இன்னொன்று சொல்ல மறந்துட்டேன் என்னுடைய ரூமை போல என்னுடைய மெஸ் சாப்பாடும் எனக்கு ஒத்து வராது சில நேரங்களில் வாந்தி, வயிறு வலி, உப்பிசம் போன்ற உபாதைகள் ஏற்படும், சாப்பாடும் சுமாராக தான் இருக்கும் இதை விட்டு வெளியே வேறொரு ஹோட்டலில் சாப்பிட்டால் ஒரு வேளைக்கே பத்து அல்லது பன்னிரண்டு திரகம்ஸ் ஆகும் வேறொரு ஹோட்டலில் மெஸ் வசதியும் இல்லை ஆனால் நான் சாப்பிடும் மலபாரி மெஸ்ஸில் மூன்று வேலைக்கு சேர்த்தே மாதம் 350 திரகம்ஸ் தான் அதனால் தான் அந்த மெஸ்ஸை விடவும் மனம் இல்லை சொந்தமாக சமைத்து சாப்பிடலாம் என்றால் அதற்குரிய இட வசதியும் இல்லை. வேறு வழியில்லாமல் அந்த மெஸ் சாப்பாட்டையே சாப்பிட்டு வந்தேன். இதனால் வயிற்றில் அல்சர் வேறு வந்தது.

விசா முடிவடைய இன்னும் ஒரு வார காலமே உள்ளது ..மூன்று ஆண்டு காலமாக ஈரானி முதலாளி சம்பளத்தை துளி கூட ஏற்ற வில்லை ஆனால் அந்த ஏரியாவில் ரூம் மற்றும் உணவு பொருள்களின் விலை ஏறி கொண்டே இருந்தது... ரூம் ,சாப்பாடு அத்தியாவசியமான ஒன்று ...உணவு இருப்பிடம் இது நல்லபடியாக இருந்தால் தான் நல்ல முறையில் வேலை செய்ய முடியும். ஆனால் விலைவாசி உயர்வால் என் சம்பளம் என் தேவைக்கு போக ஊருக்கு அனுப்புவது போதுமானதாக இல்லை அதனால் ஈரானி முதலாளியிடம் ரொம்ப பணிவாக ஐயா 12 மணி நேர வேலை அதுவும் ஒரு வாரம் செய்ய கூடிய வேலையை ஒன்று அல்லது ரெண்டு நாட்களில் முடித்து விடுகிறேன்.

வேலையிலும் எந்த தவறும் ஏற்படாமல் சிறப்பாக செய்கிறேன்.. இங்கு விலைவாசியும் ஏறி விட்டது ஆனால் சம்பளத்தில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை. கொஞ்சம் சம்பளத்தை கூட்டி தந்தால் நல்லதாக இருக்கும் என்றேன்... ஆனால் அந்த ஈரானி முதலாளி இன்னும் ரெண்டு வருடத்திற்க்கு இப்படி தான் சம்பளம் இருக்கும். விருப்பம் இருந்தால் இரு இல்லையென்றால் உன் விசாவை ரெனீவல் பண்ணாமல் கேன்சல் செய்து விட்டு போய் விடு என்றார்.

இப்படி அரை குறையாய் சாப்பிட்டும், மூட்டை பூச்சியும் ,கரப்பான் பூச்சியும் தொல்லை தரும் ரூமில் இவ்வளவு கஷ்டப்பட்டும் என் குடும்பத்திற்கு சரியாக தேவைகளை நிவர்த்தி செய்ய முடியாத பாவி ஆகி விட்டேன்.

இப்படி என் உழைப்பை புரியாத, மதிக்காத கம்பெனியில் வேலை செய்து ஒரு பயனும் ஏற்பட போவதில்லை

அதனால் என் விசாவை கேன்சல் செய்து விட்டு சொந்த ஊர் செல்ல திட்டமிட்டேன்

நிச்சயம் என் இந்திய பாரத மாதா என்னை காப்பாற்றுவாள் என்ற நம்பிக்கையில்.

விசா கேன்சல் செய்து விட்டு என் துணி மணிகளை பெட்டியில் எடுத்து கொண்டு துபாய் ஏர்போர்ட்க்கு வந்தேன்... செக்கிங் எல்லாம் முடிந்து விமானத்தில் ஏறினேன் ஒரு மூணு மணி நேரத்தில் திருச்சி ஏர்போர்ட்க்கு வந்து விட்டேன் மூன்று வருடங்களுக்கு பிறகு என் தாய் நாட்டிற்கு வருகிறேன் மனதில் ஆயிரம் வாட்ஸ் மகிழ்ச்சி செக்கிங் எல்லாம் முடித்து என் லக்கேஜை எடுக்கும் போது என் சட்டையிலிருந்து ஒரு மூட்டை பூச்சி விழுந்தது அந்த மூட்டை பூச்சி உடம்பில் உயிர் இல்லை அது போல தான் என் கஷ்டங்களும், வலிகளும் என் தாய் நாட்டிற்கு வந்த உடனே வலிமை இல்லாமல் போனதாக உணர்ந்தேன். நிச்சயம் என் தாய் நாட்டில் என் உழைப்பை வைத்து உயர்வேன் என்ற நம்பிக்கையில் வாசலில் ஆசையோடு காத்திருக்கும் அப்பா அம்மாவை காண சென்று கொண்டு இருந்தேன். ■

**பொருத்தம் பத்தும் பார்த்தும்**
**பொய்த்த வாழ்க்கை உண்டு**
**விருப்பம் வேறாய்ப் போக**
**விவாகம் வீணாய்ப் போகும்**
**பொருத்தம் மனதில் வேண்டும்**
**பழகியே புரிதல் வேண்டும்**
**இரண்டு மனது மொன்றி**
**இல்லறம் தொடங்க வேண்டும்**

**சுரேசு சீனிவாசன்**

# நாகரிகம்

## தமிழ்நெஞ்சம் அமின்

அங்கங்கள் அனைத்தும்
இறுக்கிப் பிடித்து
பாங்கான பருவம்
திமிறிக் கொண்டு
ஆண்களின் கண்கள்
அகல விரிய...
எண்ணங்கள் முழுதும்
சபலங்கள் சேர...
ஆடைகள் உடுத்தி
அலைகின்ற பெண்கள்
நாளை நமக்கும்
பெண் பிள்ளைகள்
உண்டு என்பதை
மறந்திட வேண்டாம்!
ஆடவரை வழிகெட
செய்திடல் தகுமா?
பண்பாய் பொறுப்பாய்
நடந்திட்டால் சுகமே
பாரினர் போற்ற
வாழ்தலும் நலமே!

வெற்றிடமாகதான்
இருக்கிறது /
பலூன் விற்பவனின் /
வயிறு.

மரம் வெட்டும் போது
இரத்தம் வழிந்தது
சிலுவையிலிருந்து

குழந்தையின் கனவில்
ஆசிரியர் பிரம்புடன்
வீட்டுப்பாடம்

கண்ணாமூச்சி ஆட்டம்
காட்டிக்கொடுத்தது
கொழுசு

குழந்தையை
தாலாட்டியது
மொபைல்

தீயை அணைக்க
தீக்குச்சி செய்தான்
சிறுவன்

பேருந்து நிலையம்
முழுமையும் நிறைந்தது
மூத்திர வாசம்

சிதறிய உணவு
பசியாறின
எறும்புகள்

திருடன் வீட்டில்
திருடிய
CCTV கேமிரா

சுபி. முருகன்
தர்மபுரி

## ஐக்கூ

செடியில் ஊற்றிய தண்ணீர்
தேங்கி நிற்கிறது
துளித்துளியாக இலையில்

தண்ணீர் துளியில்
யார் எழுதியதோ
தலைகீழாக வாசகம்

முள் நிறைந்த செடியில்
தடவிகொண்டிருக்கிறது
ஒரு துளி

காய்ந்த மரம்
கூர்மையாக இருக்கிறது
கிளைகளின் நுனி.

இலை உதிர்ந்த மரம்
துளிர்விட தொடங்கியது
ஒரு சிட்டு

குருவியின் சப்தம்
ஓயாமல் ஒலிக்கிறது
அலைபேசி

நெடுந்தூரப் பயணம்
இளைப்பாறிய படியே இருக்கிறது
பூங்காவில் சிலை

வானை பார்க்கும் குருவி
கூர்ந்து கவனித்தபடியே
ஒரு வேடன்

பட்ட மரத்து நிழலில்
மயங்கி விழுகிறது
கூடு இழந்த பறவை

வசந்த காலம்
நிறைந்து இருக்கிறது
மரத்தில் குருவிகள்

கிளையில் குருவி
தகவல் கொடுக்கிறது
அலைபேசியில் குறுஞ்செய்தி

அடர்ந்த காட்டில்
நிற்காமல் ஓடுகிறது
ஆற்றோடு மீன்கள்

அரிசியை புடைக்க
அதிகம் மிஞ்சுகிறது
எலிப்புளுக்கை

அகோர அலைகள்
சுழற்றி அடிக்கிறது
மீனவன் வாழ்க்கையை

காற்றழுத்த தாழ்வு
எழும்பி நிற்கிறது
அலைகள்

சுனாமி அலைகள்
மெள்ள தனிகிறது
மனிதஉயிர்

பட்டம் விடும் சிறுவன்
நூல் அறுந்து கிடக்கிறது
வீட்டில் தையல் இயந்திரம்

## லிமரைக்கூ

இலையில் தங்கிய துளிகள்
மேலும் கீழுமாக ஆடி அசைகிறது
செடியில் துளிர்விட்ட அல்லிகள்

## பழமொன்ரியு

வினை தீர்ப்பான் விநாயகன்
யார் வந்து காப்பாரோ
கரைக்கும் நேரம்

## சென்ரியு

நீண்ட நாட்களாக
வறண்ட பூமியில் துளி
யாரோ துப்பிய எச்சில்.

பாண்டிய ராஜ்
திருப்பூர்

# புதுச்சேரியின் உண்மையான விடுதலைநாள்...



இந்தியா விடுதலை பெற்ற நாள் 1947 ஆகத்து திங்கள் 15 என்பது அனைவரும் அறிந்ததே. அதற்கடுத்த நாளான ஆகத்து 16ம் நாளையே புதுச்சேரியின் விடுதலை நாளாக கடந்த பல காலமாகக் கொண்டாடிவந்தனர். உண்மையில் புதுச்சேரியின் வரலாற்றைத் திரும்பிப் பார்த்தோமென்றால் , பிரான்சின் பாராளுமன்றத்தில் புதுச்சேரிக்கான விடுதலையை சட்டமாக்கி அமல்படுத்திய நாளே புதுச்சேரியின் விடுதலைநாள் ஆகும்.

பிரஞ்சிந்திய புதுச்சேரி பிரதேச விடுதலைக்கால மக கள் நல நற்பணி இயக்கத்தை டி.சிவராஜ், சிவ.இளங்கோ போன்றோர் ஒரு குழுவை வைத்துப் போராடி வந்தனர். அக்குழு 1962ல் நவம்பர் ஒன்றாம் தேதியே புதுச்சேரி விடுதலைக்கான நாள் என முடிவு செய்து போராடியது. அதன் அடிப்படையில் 2013ல் டிசம்.23ம் தேதி அன்றைய கவர்னர் வீரேந்திர கட்டாரியா முன்னிலையில் ஒப்புதல் பெறப்பட்டு தொடர்ந்து இன்றுவரை கொண்டாடிவருகிறது.

புதுச்சேரி பிரெஞ்சிந்திய வரலாற்றைக் கொஞ்சம் திரும்பிப் பார்ப்போம்.1673 ம் ஆண்டு பிரெஞ்சுக்கார்ர்கள் புதுவைக்கு வந்து தன் ஆளுகையை நிலைநிறுத்திக்கொண்டனர். தனக்கான சரியான இடத்தைத் தேர்வு செய்து புதுச்சேரி மக்கள்கூட உள்நுழையாத பகுதியாக சில பகுதிகளை எடுத்துக்கொண்டு அவர்கள் வாழ்ந்துவந்தனர். அதற்குட்பட்ட பகுதியில் நீதிமன்றம் இருந்தது. 1873ல் பொன்னுசாமிப்பிள்ளை என்ற வழக்கறிஞர் பூட்ஸ் போட்டு நீதிமன்றத்திற்கு வந்ததை தடைசெய்தனர் பிரெஞ்சு வழக்கறிஞர்கள். இதை எதிர்த்து பிரான்சு நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்து வெற்றி பெற்றார். இந்த நிகழ்வை எழுத்தாளர் பிரபஞ்சன் கதையாக எழுதியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

அதன்பிறகு பிரஞ்சு அரசுக்கு எதிராக மக்கள் பல போராட்டங்களை நடத்த ஆரம்பித்தனர். 1936 ல் பஞ்சாலைத் தொழிலாளர் துப்பாக்கிச்சூடு சம்பவம் மேலும் போராட்டத்தைத் தீவிரமாக்கியது.





# நவம்பர் 1

அந்நிலையில் புதுச்சேரி மக்கள் விருப்பம் கேட்க கீழூரில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. 178 பேர் மக்கள் பிரதி நிதியாகக் கலந்துகொண்டு வாக்களித்தனர். 170 பேர் இந்தியாவுடன் புது ச்சேரி இணையவேண்டுமென வாக்களித்தனர். இந்த நிகழ்வு 1954 ல் நடந்து,

பிறகு எட்டு வருடம் கழித்தே பிரெஞ்சு பாராளுமன்றம் புதுச்சேரி இந்தியாவுடன் இணையவும் பிரெஞ்சு அரசு புதுச்சேரி மீதுள்ள ஆளுகையை திரும்ப பெற்றுக்கொள்ளவும் ஒப்புதல் அளித்தது. அந்த நாள் 1962 நவம்பர் ஒன்றாம்நாள் ஆகும். ஆகவே அந்த பொன்னாளையே புதுச்சேரி மக்கள் விடுதலை பொன்னாளாகக் கொண்டாகொண்டாடப்படுகிறது. இன்று கொண்டாடப்படும் புதுச்சேரியின் ஐம்பத்தைந்தாவது விடுதலை நாளாகும்.



# குலசேகரின் ''சாருலதா''
## மதிப்பீடு

**முனைவர். பெண்ணியம் செல்வக்குமாரி**

சாருலதாவைக் கையில் எடுத்துப் படிக்க ஆரம்பித்தேன், சத்யசித்ரேயின் சாருலதா எப்படியென்று நானறியேன். ஆனால் குலசேகரின் சாரு அதுவும் அடர்ந்த அக இருளில் கிணற்றுள் மூழ்கி தெளிவுற கிடக்கும் மாய படிமமாய் நிலவெனக் கிடக்கிறாள். அக்கிடத்தலில் சுகத்தின் இருப்பை மட்டும் என் கையப்படுத்தினாள். துயரை நூல் நெடுக இழையோடச் செய்திருக்கும் இரகசியத்தின் பெண்ணவள்.

இயன்றவரைக்கும் தன்னை இயற்கையின் அழகியலோடு இணைந்து வாழ முனைபவள். கூட கவித்துவத்தோடும் பொருத்திக்கொண்ட அவளின் துயரம், ஆற்றாமை, நிராசைகளனைத்தும் அவளுக்குள் பெருங்கடலென விரிய விரிய, அதை உள்ளுக்குள் உறிஞ்சிக்குடிக்கும் கணப்பொழுதின் பூதமாகிறாள் எனும் உண்மையிலிருந்து விடுபடமுடியவில்லை.


வார்த்தைகள் அற்றுப்போகிற நேரத்தில் பார்வையின் ஸ்பரிசம் பல கேள்விகளை எழுப்பும், விடை தேடவும் செய்யும். அதை மிக அற்புதமாக தம் குறுநாவலில் காட்சிப்படுத்தியிருக்கிறார் குலசேகர். சாருவின் உணர்வலைகளையோ வேறு எந்தப் பெண்ணின் உணர்வலைகளையோ ஓர் ஆணாசிரியனால் படிகமாக வெளிப்படுத்த இயலவே இயலாது என்ற என் கருத்தியலை அடித்து நொறுக்கியுள்ளார் இந்நூலின் ஆசிரியர்.

வேறெந்த தேடலுமின்றி மனதின் அற்புத கரணியங்களை உள்ளுக்குள் நோட்டமிடும் ஒரு மாயவித்தைக்காரனாக சாருவை நம்மிடையே உலவ விட்டு சாகசங்களை உருவாக்கி, பின் நம் கவனத்தை அவருக்குள் ஈர்த்துக்கொள்கின்றார்.

ஆணாதிக்கச்சமூகத்தில் பெண்ணின் அதீத கனவுகள், உணர்வுகள் முடக்கப்பட்டிருக்கின்றன, அல்லது உள்ளிழுக்கப்பட்டு இறுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன. சாரு இவற்றையெல்லாம் தன் மௌனத்தால் உடைத்தெறிகிறாள். என்றாலும் விட்டு விடுதலையாக முடியாமல் இன்றும் கூண்டில் கிடக்கும் லட்சோபலட்சம் பெண்களின் பிரதிபிம்பமாய் இக்கதையிலும் என்னிலும் வெளிப்படுகிறாள். இக்குறுநாவலைப் படிக்கும் ஒவ்வோர் மனதிலும் சாருவின் பிம்பம் நிதர்சனமாய் நிழலாடுவதை உணரமுடியும்.

Sandhya Publications
77, 53rd Street
9th Avenue, Ashok Nagar,
Chennai 600 083
email: sandhyapublications@yahoo.com

**விலை: 75 INR**






# இசையில் இருத்தல்

## கஸல் கவ்வாலி தொட்டு த்ரூபா வரை சிறு குறிப்பு...

இசை பற்றிய அறிவு நீட்சியாக இல்லாவிட்டாலும் அதன் மீதான தேடல் இப்போது கிளை விட்டிருக்கிறது. இதற்கு முழுக் காரணமும் சாருநிவேதிதா என்றால் ஆச்சரியப்பட வேண்டியதில்லை. சாருவின் கலகம் காதல் இசை எனும் பிரதியே இப்பத்திக்கான ஊக்கத்தையும் இசைத் தேடலையும் என்னுல் உசுப்பி விட்டிருக்கிறது...

முதலில் ' நஹாரா' சப்த இசையிலிருந்து தொடங்கினால் டில்லி தர்ஹாக்கலில் இதனை கண்டதாக சாரு கூறுகிறார். இது முரசின் வடிவத்தில் அமைந்து இரண்டு தடிகள் கொண்டு இசைக்கப்படும் ஒரு கருவியாக இருக்கிறது. தொழுகைக்கான அழைப்பு நேரங்களில் முன்பொருகாலம் இது போன்றே ஒன்றே பயன்படுத்தப்பட்டதாக வரலாறுகள் கூறுகின்றன...

கவ்வாலி இசையினை பொறுத்த வரையிலும், கஸல் இசையினை பொறுத்த வரையிலும் டாகர் சகோதரர்களின் இசை பிறப்பு மிக முக்கியமானது. உஸ்தாத் நஸீர் மொய்னுதீன் டாகர், உஸ்தாத் நஸீர் அமீனுத்தீன் டாகர் போன்றோரின் தத்ரூப இசையானது தலைமுறை தலைமுறையாக கவ்வாலி கஸல் இசைகளில் அதிகம் தாக்கம் செலுத்தியிருக்கிறது எனலாம்...

'ரெகெதன்' என்பது கறுப்பின மக்களின் இசை வடிவமாகும். இதன் தொடர்ச்சியில் நீஞோஸ் குழந்தைகள் (Reggaetion Ninos) எனும் லத்தீன் அமெரிக்க ஸ்பானிஷ் மொழியிலமைந்த பாடல் இசைகள் உலகினை குலுக்கிய இசை வடிவங்களுல் இலகுவாக புகுந்து கொள்ளக் கூடியதாக இருந்தன. 'ரெகே' என்பது நகர்ப்புற மக்களின் இசை வடிவமாக இருந்தது...

1973 ல் ஹாராவின் கஸல் கவ்வாலி சார்ந்த இசை வடிவங்கள் அக்கால அதிகார மையத்திற்கெதிரான போராட்டத்தினை மேற்கொண்டது வரலாற்றில் முக்கிய நிகழ்வே. இவ்வாறான இசைகளை பாடுபவர்கள் சிறையில் அடைக்கப்பட்டு தேசத்துரோகிகளாக அடையாளப்படுத்தப்பட்டனர்.

கிரேக்கர்கள் இசையினை மாயையின் வடிவமாக நம்பினார்கள். ே இசை என்பது எங்களுக்கு பொழுது போக்கல்ல அது எங்கள் அடையாளத்தின் குறியீடுபு எனும் கலீபியா இசை வர்த்தகரின் கருத்து கவனயீர்ப்புக்குரியது...

கறுப்பின மக்களே இசையின் அதிகாரத்தை கஸலில் கையாண்டனர். பெர்பெர் இசை 17ம் 18ம் நூற்றண்டுகளில் பெரும் வியாபகத்தை கொண்டிருந்தது என்பதினை சே. கெபிரா பாப்லோ நெரூதா, வித்தோர் ஹாரா, வியலத்தா பாரா போன்றோரின் பாடல்களில் அவதானிக்க முடிகிறது.

“இசை என்பது எவ்வளவு முக்கியமானது என்று தெரிய வேண்டுமானால் தென் அமெரிக்காவின் தென்பகுதியில் என்ன நடந்தது என்று கவனியுங்கள். இசை அங்கே ஆபத்தான ஒன்றாகக் கருதப்பட்டு தடைசெய்யப்பட்டதுபு என்கிறார் யெஹுதி மெனுஹின்.

இன்னும் விரிவான தகவல்கள் பல உண்டு. தேடல் தொடரும்...

**சாஜித்**

# சிந்துவெளி கவிதை அரங்க நிகழ்ச்சி

## புதுவைத் தமிழ்ச்சங்கத்தில் முப்பெரும் கவிதை நூல்கள் வெளியீடு



22.10.2017 ஞாயிறு மாலை ஆறு மணிக்கு சிந்துவெளி சார்பில் கவியரங்க நிகழ்வு வெகு சிறப்பாக நடந்தேறியது. பெண்ணியம் செல்வக்குமாரியின் **''கரைந்தழும் கடல்''** பேராசிரியர் சுப.வெங்கடாசலம் அவர்களின் **''சுடும் விழிச்சுடர்''** கவிநிலவனின் **''நிலாத்தூறல்''** எனும் முப்பெரும் நூல்கள் புதுவைத் தமிழ்ச்சங்கத்தில் ஆன்றோர் பெருமக்கள் முன்னிலையில் சிறப்பாக வெளியிடப்பட்டன.

இவ்விழாவில் முனைவர். பெண்ணியம் செல்வக்குமாரி தன் நோக்கவுரையில் கவிஞர்கள் குறித்தும் கவிதைகள் குறித்தும் பேசினார். எத்தனையோ கவிஞர்கள் தன் கவிதைகளை இதழ்களில் வெளியிடவும் கவிதை நூல்களாக்கவும் வாய்ப்பற்றிருக்கிறார்கள். சமூகத்தில் நிலவும் வர்க்கப்பேதங்கள் கலை, இலக்கியத்திலும் உண்டு. தரமிக்கதாக சொல்லப்படுகின்ற சிற்றிதழ்களில் எழுதமுடியவில்லையே என்ற ஏக்கம் பலபேருக்கு இருப்பதை உணர்வேன். என்னைப் பொறுத்தவரையில் எல்லாச் சிற்றிதழ்களிலும் நயமிக்க கவிதைகளும் உண்டு. நயமில்லாக் கவிதைகளும் உண்டு. கவிஞனை வைத்துக் கவிதைகளை எடைபோடக்கூடாது. ஆகவே வாய்ப்பு மறுக்கப்பட்ட அல்லது வாய்ப்பில்லாத கவிஞர்களுக்கு அவர்களுடைய நல்ல எழுத்துக்களை அங்கீகரிக்கச் செய்வது என்ற அடிப்படையில் இதை நாம் தொடர்ந்து செய்யவிருக்கிறோம்.

இதற்கு உறுதுணையாக விளங்கக் கூடியவர் பிரான்சு தமிழ்நெஞ்சம் இதழாசிரியர் ஆவார். அவர் என்னுடைய கவிதைப் பணிக்கு உற்ற துணையாக விளங்குகிறார். எனவேதான் குறைந்த செலவில் கவிதை புத்தகங்களை தேர்த்தியான முறையில் பதிப்பிக்க முடிகிறது. இந்நேரத்தில் மறைவெய்திய காகிதம் பதிப்பகம் தம்பி மனோபாரதியை நினைவுக்கூறவும் கடமைப்பட்டுள்ளேன்.

எழுத்துக்களாய் அனுப்புகின்ற கவிதைகளை நன்கு வடிவமைத்து நூலாக்கம் எவ்வித பொருளுதவியும் எதிர்பார்க்காமல் செய்து வருகிறார். அவருக்கு இந்த நேரத்தில் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.




இவருடைய உதவியினால் ஆயுதாவின் அழுக்குத்தேவதை, சுப. வெங்கடாச்சலம் அவர்களின் மனம்சுடும் தோட்டாக்கள் , எனது கரைந்தழும் கடல் போன்ற பல கவிதை நூல்கள் பதிப்பிக்கப்பட்டிருக்கிறது.



இவ்வகையில் விழாவிற்கு வந்திருக்கிற அத்தனைபேருக்கும் மனநெகிழ்வுடன் நன்றி கூறி விடைபெற்றார் >

அடுத்து கலைமாமணி முனைவர் முத்து ( தமிழ்ச்சங்கத்தலைவர்,) நூல்களைப் பெற்றுச் சிறப்பித்துப் பேசினார். தலைமையுரையில் சாது. அரிமாவளவன் அவர்கள் ே முத்தான மூன்று கவிதைநூல்களை இச்சங்கத்தின் மூலம் வெளியிடுவதில் பெருமகிழ்வடைகிறேன் ே என்றார். தமிழ்ச்சங்க செயலர் பொறிஞர் மு.பா அவர்கள் மேலும் சிறப்பித்துப் பேசினார்.

புதுச்சேரி மொழியில் பணபாட்டு ஆய்வு மையத்தின் பேராசிரியர் இரா.சம்பத் அவர்கள் கவிதை இயல் குறித்து சிறப்பனதொரு உரையை வழங்கினார். புதுவைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் முனைவர். இரவிக்குமார் மூன்று கவிதை நூல்களை மதிப்பீடு செய்து வெகு இயல்பாகவும் கேட்போருக்கு இன்பம் பயக்கும் வகையில் அமைந்திருந்தது குறிப்பிடத்தக்கது. காட்சிப்பதிவை துளசி சந்திரசேகரன் மிக அற்புதமாக செய்தார். கவிநிலவன் நன்றியுரை வழங்க விழா இனிதே முடிந்தது.



## பாரியன்பன் - கவிதைகள்

1.
காலம் கரைந்து
எல்லோரையும் ஒருநாள்
காணாமலாக்கும்.
நீங்களென்னை கவனத்தில்
கொள்ளத்தான்
இத்தனை ஞாபகமுடிச்சுகளும்.

2.
உன் குற்றங்களுக்கு
என் நட்பு துணைபுரியுமென
நினைப்பாயேயானால்
இக்கணமே நம்மிருவரும்
பிரிந்து கொள்ளலாம்.
நம் நட்பு கடந்தகால நட்பாகவே
இருந்து கொள்ளட்டும்.

3.
சிங்கத்தின்
குகையென்றறிந்தும்
அழையா விருந்தாளியாய்
வந்திருக்குமுனக்கு
அசைவ விருந்து வைப்பதே
மிகச்சரி.

4.
கானகம் சென்று
திரும்பியப் பறவையின்
எச்சம்
புனிதமாக்கியது பூமியை:...

5.
அக்கம்பக்கம்
யாருமில்லாமல் போகலாம்.
பகலுக்குப் பேச்சு வரும்
இருட்டுக்குப் பார்வையிருக்கு
பார்த்து நட.

- பாரியன்பன்

# அரியாசனம்

## பாவலர் கருமலைத்தமிழாழன்

ஆவிற்கு இழைத்திட்ட அநீதிக் காக
   அரும்புதல்வன் உயிர்கொடுத்து நீதி காத்தும்
நாவிற்சொல் தவறிட்ட தவறுக் காக
   நறும்உயிரைத் தானீந்து நீதி காத்தும்
கோவிலுக்குள் அமர்ந்தருளைப் பொழிந்து காக்கும்
   கோவாக இருந்திட்ட ஆட்சி பீடம்
பாவிகளின் பலிபீட மாக மாறிப்
   பழிசுமந்த பீடமாக ஆன தின்று!

பசிவந்தால் பத்தும்போம் என்ப தைப்போல்
   பதிவியாசை வந்தாலும் போகும் என்னும்
அசிங்கத்தை அரங்கேற்றித் தமிழ கத்தின்
   அரும்பெயரைப் பெருமையினைத் தாழ வைத்தார்!
பசித்தாலும் புல்தின்னாப் புலிதாம் என்னும்
   பழக்கத்தை விட்டின்று நரக லையும்
புசித்திடுவோம் அரியணையில் அமர்தற் கென்று
   புவிதனக்குக் காட்டிட்டார் உறுப்பி னர்தாம்!



கொள்ளையினை அடித்ததற்குத் தண்ட னைதாம்
   கொடுத்தபின்பும் கொள்ளையினை அடிப்ப தற்கே
கொள்ளையராய்க் கூடியுள்ளார் ஓரி டத்தில்
   கோட்டையிலே கோலோச்சும் பதவிக் காக!
கள்ளராக மாறிவிட்ட சட்ட மன்ற
   கயவரினை ஓடஓட விரட்டி விட்டே
உள்ளத்தில் தூய்மைதொண்டு கொண்டி லிங்கும்
   உத்தமரை அரியணையில் அமர வைப்போம்!

# நடக்க முடியாதது என ...



காலையின் சோம்பல்
விழிப்பில் ஒரு
பதைப்பு.

நாவு விழையும்
காபி - மனம்
ஒதுக்க,
கசப்பு ஊறுகிறது.

- - "பின்னிட்ட நாளில்
கை சூடு
பொறுக்காமல்
துண்டு பொதித்து
தங்க நுரை
பொங்கி வர,
மணம் சுழன்று
மேலேற,
மூச்சிழுத்து
காபியின் சாரம்
பாதி உறிஞ்சி
நாவு தீரத்துடன்
சுவைத்த சூடு,
கிச்சா! உன்
அருகாமை
தந்த ரசிப்போ?!" - -

குளித்து,
அலமாரி திறந்து...
எத்தனை சட்டை?
அத்தனை
அணிய நேரமுண்டா?

- - ஒரு நாளில்
மடிப்பு கலையாது
மூன்று வேளை உடை
மாற்றிய
ஷோக்கு,
உன்னாலா,
கிச்சா?" - -

"சாப்பிட நேரமாச்சே?!"
அழைப்பு.
அரிசி ஆபத்தோ?
கீறி கிளர்ந்த
நினைவுப் பேரலை...

நாக்கு நினைப்பதை
வஞ்சனையின்றி
சந்தித்த நேரமெலாம்
ட்ரீட் டுக்கு
சாக்கு தேடி
ஊட்டிக் கொண்ட
பொழுதுகள்...

"என்னவாச்சு இப்ப?
மண்டெ கொடெச்சல்
எதுக்காம்?"
மனைவி எனும்
மறுபாதி.

- - பேய்ப் பந்தாடி,
ரீட்டா ஐஸ் கிரீம்
பங்கிட்டு,
பள்ளிகாலமெங்கும்
பரீட்சை பயம் ,
அரும்பு மீசை
ஒப்பிட்டு,
கக்கூஸ் கதவடைப்பில்
இருமலில்,
புகை பழகி,
காலரை தூக்கி,
பைக் பெருமையுடன்
கல்லூரி - - -
நேர் காணலில்,
வேலையில்,
அந்தரங்க பரிமாறலில்,
காதல் ஃபான்டஸியில்,
திருமணத்தில்,
உல்லாசத்தில்,
இடிச்சிரிப்பில்,
கோணல் பேச்சில்,
பாவனை -
ரசனைகளில் மூச்சாய்
கூடவே
இழைந்த -
அப்படிப்பட்ட
கிச்சா எனும்
கிருஷ்ணா,
அப்படிப்பட்ட
என்னிடம்
சொல்லாமலே,
தான் மட்டும்
தனியாய்
செத்துப் போனான்!!

உஷாதேவி
சென்னை 600024

# பாவலர் கருமலைத்தமிழாழன் அவர்களுக்கு மலாயப் பல்கலைக்கழகம் பாராட்டு !



தமிழகத் தமிழாசிரியர் கழக மாநில மதிப்பியல் தலைவரும், ஒசூர் தமிழ்ச்சங்கச் செயலாளரும், இருபத்தைந்திற்கும் மேற்பட்ட கவிதை, ஆய்வு நூல்களை எழுதியவருமான பாவலர் கருமலைத்தமிழாழன் அவர்களின் ஐம்பதாண்டு கால இலக்கியப்பணி, அவர்செய்த தமிழ்த்தொண்டு, அவர் எழுதிய நூல்கள் பற்றிய திறனாய்வு அடங்கிய அவரின் வாழ்க்கை வரலாற்றை மலேசிய நாட்டின் மலாயப் பல்கலைக்கழகமும், தமிழ்நாட்டின் அண்ணாமலைப் பல்கலைக்கழகமும் இணைந்து நூலாக்கம் செய்தன.

அந்த வரலாற்று நூலை 11 - 08 - 2017 அன்று மலேசியா நாட்டின் தலைநகர் கோலாலம்பூரில் அமைந்துள்ள மலாயா பல்கலைக்கழகக் கருத்தரங்கு மண்டபத்தில் மலேசியா நாட்டு இளைஞர் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் டத்தோ சரவணன் அவர்கள் வெளியிட, முனைவர் திருவித்யா நூலினை ஆய்வு செய்து உரைநிகழ்த்த, மலாயப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் குமரன், அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் அரங்க பாரி ஆகியோர் பாவலர் கருமலைத்தமிழாழனுக்கு விருது வழங்கி சிறப்பு செய்தனர்.

தமிழ்நெஞ்சம் பாவலரை வாழ்த்துவதில் உவகை கொள்கிறது.